உ

கடவுள் துணை.

—*—

பதினெண்சித்தர்களில்

தெய்வீகத்தன்மைபொருந்திய

திருமூலநாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்தியகாவியம் ஆயிரம்

—(*)(*)(*)—

இஃது,

பட்டாளம் எருக்கஞ்சேரி

கனகசபைபண்டிதர்

முன்னிலையில்

களத்தூர்.

வேதகிரிமுதலியார்-குமாரர்கள்

ஆறுமுகமுதலியாராலும்

ஆயுள்வேதபாஸ்கரன்

கந்தசாமிமுதலியாராலும்

பற்பலஏட்டுப்பிரதிகளைக்கொண்டாராய்ந்து

பிழையறப் பரிசோதித்துப்

பிரதிக்கிணங்கச்

சிந்தாத்திரிப்பேட்டை,

நாராயணசாமிமுதலியார்

அண்டுசன் அவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

—(*)—

௧௮௮௯ ௵ - அக்டோபர் ௴.

உ

சிவமயம்.

திருமூலநாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியகாவியம் - ௲

காப்பு.

ஆனந்தமாகி நின்றவுமையாள்பாதம்
அகண்டபரிபூரணமாமையர்பாதம்
வானந்தமாகிநின்றகணேசர்பாதம்
மருவியதோர்அகத்தீசர்நந்திபாதம்
தானந்தமாகிநின்றகுருவின்பாதம்
சனகருடன்வியாசமகாமுனியின்பாதம்
போனந்தமாகியதோர்சித்தர்பாதம்
போற்றியாயிரத்திரட்டுபுகலுவேனே
புகலுவேன்சவர்க்காரத்தொடர்புதன்னைப்
பூட்டிவைத்தசரக்குவைப்புக்களங்குயாவும்
நிகலுவேன்செந்தூரங்கற்கம்யாவும்
நேரானமெழுகோடுபதங்கச்சுன்னம்
அகலுவேன்திராவகமுஞ்செயநீர்மற்பம்
அழகானசத்துருமித்துருவுங்கூட
புகலுவேன்திருமூலநாயன்றானும்
பாடிவைத்தேன்மானிடர்கள்பிழைக்கத்தானே.

நூல்.

(அப்பிரேகப்பற்பசத்து.)

கலிவிருத்தம்.

மாகையறுக்குமலத்தைக்கழித்திடும்
வேகமாய்ஞானம்வீடிதெனக்காட்டும்
யோகம்பலிக்குமுறுதியாங்காயந்தான்
போகம்பலிக்கும்புகழ்ச்சியிதுபாரே (௧)

பாரேநல்லப்பிரேகம்பாங்காணைகொள்ளவே
நேரேசலம்விட்டுநிமிரவெரித்திடு
காரேயிடித்துத்தனிநல்நீகஞ்செய்
சீரேசிலையிட்டுச்சேர்த்தங்குழூதிடே (௨)

ஊதிடப்பற்பமாமுறவாமிதுக்கிடை
மாதிடுசுத்தித்தகந்தியைமாட்டிடு
ஓதியகுன்றியுறவானவெண்ணெயு
மாதிமெழுகுவண்டநீர்வார்த்திடே (௩)

வார்த்திதனோடுவளமாய்ப்படிகஞ்சே
ரேத்தியனாக்கிவிடுவைங்காமித்திரங்
கோர்த்திடுமேனிசமூலத்திலேயனா
சேர்த்தேயுறும்படிசெலுத்திடுஞாலமே (௪)

ஞாலத்தினூசநலம்பெறச்சத்தாகும்
வாலுற்றவிட்டத்தைவாங்கிப்பின்னூதிடு
கோலுற்றதெல்லாங்குலாவியசத்தாகுஞ்
சூலுற்றசத்துக்குச்சுருக்கிட்டுச்சோதியே (௫)

(அப்பிரேகப்பற்பசத்துசெந்தூரம்)

சோதிக்கமித்திரஞ்சூட்டினுபொன்னந்தி
ஆதிப்படிக்கு அதினொடுவெண்கார
மாசற்றசாரம்வழங்கியரண்டுப்பு
பேதித்கவீரம்பிலத்தவளைதிலே (௬)

வளைதிலிடைக்கொக்கவாகாய்ச்சரக்கைந்தும்
அழகியத்தனினுலைத்தேபதம்பண்ணி
யிளகியவப்பிரேகச்சத்தாங்குகையினி
லிளகியச்சிலையிட்டுத்தாக்கியுருக்கிடே (௭)

உருக்கிட்டையந்திரமுருக்குமிலுப்பைப்பூ
வருக்கமாம்நொச்சியில்வாழைக்கிழங்கிலே
நெருக்கியவெண்ணெய்நெய்நேராட்டுப்பால்வெல்லங்
தெருக்குஞ்சதாக்கள்ளிதேங்காய்ப்பால்வார்த்திடே (௮)

வார்த்திதவெல்லாம்வாகாச்சமன்கூட்டி
யார்த்தியவப்பிரோகச்சத்தையதில்வாரு
ஏத்தியுருக்கியிதில்வார்பதினென்று
நாத்திரையையெய்க்கநட்சேத்திரமாகுமே (௯)

ஆமேயிச்சத்துதானெல்லாதுறைக்காகும்
போமேவெகுதூரம்போட்டதெல்லாங்கொல்லுந்
தாமேவுபாத்திரந்தனிற்கருஞ்செந்தூரம்
ஆமென்றேயீசனம்மைக்குரைத்ததே (௰)

உரைத்தமுறையெல்லமுறுதியாகயென்னந்தி
தாத்தநற்பாத்திரஞ்சமைக்கவழிசொன்ன
நிரத்தியவப்பிரோகச்சத்துக்குநேர்பாதி
தூரத்தியபொன்னியைச்சுட்டியுருக்கிடே (௰௧)

(அப்பிரோகக்குகையில்சூதம்)

உருக்கிக்குகைபோலொருதளமாய்வார்த்து
பெருக்கியசூதனைப்பேய்ச்சாற்றினிலிட்டு
சுருக்கிடிற்றூரிலேசூதமயினமாம்
அருக்கியசூதனையனைப்புண்செய்திடே (௰௨)

செய்திட்டசூதந்திரண்டேயிறுகிடுங்
கொய்திடுங்கஞ்சாவிற்குமட்டிப்பொதிந்திகை
பையப்பதினொன்றுபாங்காய்ப்புடமிட
உய்யகனகப்புடமிடமடித்திடே (௰௩)

அடுத்திட்டசூதமமளியாக்கண்விழுங்
கொடுத்திடுங்காமியங்கோடானகோடிதான்
விடுத்திடும்யோகிவிண்ணில்விலாசமாய்க்
கடுத்திடுமாருதம்போலேகவனமே (௰௪)

கவனமொன்றல்லகன்னிக்குத்தம்பனங்
சவனமொன்றல்லகாணவச்சியமாங்
சவனமென்றல்லகளியாறுகாயங்கேள்
கவனமொன்றல்லகல்லும்பொன்னாகுமே (௰௫)

(அப்பிரோககுகையில்வேதை)

ஆகுந்துறைவிட்டு அப்பால்துறைகேளு
பாகிய அப்பிரோகமூசைபலமொன்று
வேகிநிமிளைவிளங்கியபூநாகந்
தாகியகாந்தந்தனிமுண்பலமொன்றே (௰௬)

(செந்தூரம்)

பலமாமிரண்டும்பாங்காயுருக்கிட்டு
பிலமாய்க்குகைவார்போனசெந்தூரங்
குலமாஞ்சரக்கினங்கூட்டதிற்சூதந்தாய்
நலமாகச்சூதத்திற்சமைக்கச்செந்தூரமே (௰௭)

செந்தூரம்வைக்கச்சேர்ந்தவினங்கேளு
கந்தியநாதங்கலங்காதவீரரும்
பந்தியமால்தேவிபகிர்ந்தமனோசிலை
முந்தியதாயிட்டுமுட்டிச்சமைத்திடே (௰௮)

சமைக்கவேயிப்படிசகலசரக்கெல்லாம்
அமைக்கவுங்கூடாதுமளவில்லைவேதைதா
ணிமைக்குவிளித்தோரிறவாரொருநாளுஞ்
சிமைக்கும்பயந்தீருஞ்சேருவார்ஞானமே (௰௯)

சோதிக்குமித்திரஞ்சூட்டிந்துளாகேளு
மாதித்தவப்பிரோகமாதியபங்காந்தஞ்
சாதித்தசூதஞ்சகலவகைசத்தும்
பேதித்துவேதையாம்பெலப்படுமுப்புக்கே (௨௰)

(நிமிளைகட்டு உருக்கினம்)

ஏனநிமிளையெடுக்கால்முதற்றரம்
வாமயகஞ்சநிமிளைரண்டாநாசம்
வேமயக்காச்சுவேதநிமளையு
மாமயலோகநிமிளையோடஞ்சென்னே. (௨௧)

அஞ்சுநிமிளையடைவாய்மலசல
மிஞ்சவேவார்த்துவெளியிற்புதைத்திடு
வஞ்சனைதீருமருவியவூறல்போம்
நஞ்சறப்போகும்நாளோர்பதினைஞ்சே (௨௨)

பதினைஞ்சுந்தீர்ந்தபின்பாங்காய்நிமிளைக்கு
மதிமிஞ்சுபானம்வழங்குமெருக்கன்பா
லிதிலஞ்சுதாமூலம்வெங்காயமத்தஞ்சாற்
அதிமிஞ்சுபுங்கம்பால்சுருக்கிடுசாரியே (௨௩)

சாரியிற்காரிசார்க்கிடும்ரண்டுப்பு
பாரியிற்கூடன்பகிர்ந்ததுரிசியு
மாரியன்சொன்னனைப்பதமூரியில்
பாரிற்பழச்சாறும்பாங்காய்க்கலந்திடே (௨௪)

கலந்தேகுழைத்ததிர்படிமேனிச்சாறு
வலந்தியபொற்றலைச்சாற்றினிற்காற்படி
குலந்தானென்றுக்கிக்கொடியநிமிளைக்கு
சலந்தானேதீய்ந்துசாகுஞ்சுருக்கிடே (௨௫)

இட்டேசுருக்குயெடுத்தந்தமிப்படி
மட்டாகமாகரிமாட்டியேவாட்டிட்
யொட்டிநிமிளையுருகிச்செயமாகுங்
கட்டுநிமிளைக்குக்காலயங்கூட்டிடே (௨௬)

கூட்டியுருக்கக்குலாவியமித்திர
மாட்டியகாரீயமதுதானிடைநாலு
தாட்டியசாரிதானுமிடையொன்று
நாட்டியவீரமதைத்தநிமிளைக்கே (௨௭)

(நிமிளைகளங்கு.)

நிமிளையும்லோகமுநீட்டியுருகையி
லமளியாய்த்தங்கமதுநாலுக்கொன்றிடு
கமளிக்கநாகத்திற்காட்டுயினிபங்கிற்
றமளித்தநாகத்தைத்தாக்குமுன்பாதியே (௨௮)

தாக்கியுருக்கித்தனிலிங்கம்வீரமும்
வாக்கியகாரீயம்வளமாமிதுமூன்றுந்
தூக்கியிடைரசஞ்சுழன்றுவுருகையில்
தேக்கியிடைசேர்க்கச்செயமாங்களங்கமே. (௨௯)

களங்கத்திலொன்றுகாட்டொருசத்தின்மேல்
தளங்கத்தபொன்னுருக்தன்மேனியெட்டாகும்
வளங்கியலோகந்தான்மதிரவிமேல்வேதை
யுளங்களங்கம்பின்னோடேமுறைகேளே. (௩௰)

கேட்கிலென்னந்திகிருபையாச்சொன்னது
வாட்குங்கத்திடைஞகம்பாங்காகச்சேர்
தாட்கிப்புடஞ்செயச்சகத்தினில்வேதையாம்
வாட்கிலிருப்பைவளமாயுருக்கிடே. (௩௧)

(இரும்புஉருக்கு)

உருக்குமிரும்புக்குனுத்தமமானது
மருக்குமெருக்குவளமாயழிஞ்சியுஞ்
செருக்கும்புரசுசிறந்தநல்முள்ளியுங்
கருக்கண்டங்கத்திரிகாட்டினிற்குன்றியே. (௩௨)

குன்றியுடனேகூட்டாய்திருகள்ளி
பன்றியாமாரகம்பார்தேவதாளியும்
பொன்றியசாரணைபுகழாங்கருமத்து
துன்றியகஞ்சாவுமாகவெண்பூவித்தே (௩௩)

வித்துவகைதான்விளங்கப்பதினொன்று
இத்தையிட்கூட்டியிசைவாயிடித்ததை
அத்திவிரைவேரின்சாற்றிலரைத்ததை
பொத்திப்புடமுந்தயிலமும்வாங்கிடே (௩௪)

வாங்கித்தயிலத்தைவார்த்தேயபத்தின்மேல்
தேங்கச்சிவனார்தயிலமதைவிட்டுப்
போங்குமொருசாரிபோட்டதில்நாக்காரி
வாங்கியவீரமும்லிங்கமுங்கூட்டிடே (௩௫)

கூட்டிமிதனிற்குலாவியவாளஞ்சேர்
நீட்டிமயங்தானிறுக்கதுக்கெட்டொன்று
ஊட்டிடுஞ்சாக்கையுறவாய்த்தயிலத்தில
தாட்டியுருக்கத்தங்கம்போலாடுமே (௩௬)

ஆடியுருக்கியடவாகவெள்ளீரும்
வாடியிளைத்துமயங்காதேமாண்பரே
தேடியசோதனைசெலுத்தியேசோதிக்க
கோடிதுறைவேதைகுலாவுமயந்தானே (௩௭)

அயம்விட்டால்வேதையாகாதுவன்னந்தான்
அசியம்விட்டாலுப்புக்கு அஞ்சிவெகுண்டோடும்
அயம்விட்டாற்காயமழிவுக்குமேதுவாம்
அயம்விட்டாற்கெட்டாரென்றறைந்தனனந்தியே (௩௮)

நந்தியுரைத்தார்நலமாம்பெரியோர்க்கு
பந்தித்தயேமகிமிளையுந்தங்கமுங்
தொந்தித்துருகையில்கூட்டுமிடைகூகம்
விந்தித்தேதூதிவிந்துவிற்போட்டிடே (௩௯)

போட்டவெடைக்கொக்கப்புகட்டிடுவீரனை
நீட்டிகுருவண்டுகிலையானபூரமுங்
காட்டறயாமுந்தனிவெள்ளைகண்டரும்
ஆட்டியவிந்துவாலரைத்துமேற்பூசிட்டே (௪௰)

பூசிமணிமேல்புளரவுலர்த்திடு
ஆசைமணல்மேலடவாய்ப்புடம்பத்து
மாசையறவேவழங்கப்புடமொன்றி
லோசைக்குருவாகுமென்றுமொளிப்பல்லவே (௪௧)

ஒப்பல்லவென்றுவுரைத்தமுறைகேட்கில்
செப்பியசூதத்திற்சேரொன்றதின்மே
லப்பியவைக்கவமளியாக்கட்டுண்ணுங்
தப்பியசூதங்கேள்தான்கொல்லும்நூற்றையே (௪௨)

நூற்றுக்குவொன்றுநூறேறுக்கேர்ந்தனை
மாற்றுவதென்னில்வளமாகநூற்றெட்டா
மூற்றுக்கண்போலவொருகோடிவேதையாங்
காற்றுற்றதொந்தனைக்கண்டோடும்வேதையே (௪௩)

(சிமிளை குரு)

வேதைசிமிளைபோல்வேறென்றுமொவ்வாது
ஆதிபாராசத்தியம்மனுடநாதஞ்
சாதிவகையைந்துந்தனித்தனியேதுரை
சோதிகுருபோலேகூட்டிடுகெஞ்சமே (௪௪)

கஞ்சமிமிளையுங்கட்டிடுதங்கமு
மிஞ்சுறுசூதமும்விளங்கவுருக்கிடு
முன்செய்தவாறுபோல்மூட்டக்குருவாகு
மஞ்சாமல்செய்யவளித்தன்னசத்தியே (சரு)

சத்திகுருவாற்சரக்கைத்தொடுமுனே
வித்தையிலெட்டேட்டும்விளங்குங்கவனமும்
புத்தியுமுத்தியும்பொலிவுற்றஞானமுஞ்
சித்தியுமாகுஞ்சிவனந்திபாதமே (சசு)

பாதம்பரிசனம்பகர்ந்திடுந்தூமமாம்
நீதமாநாதம்நிகர்த்திடுவாசனை
வேதையிலெட்டெட்டும்விளையாடவன்குரு
ஓதவின்மேற்பின்னொப்பில்லைநந்தியே (சஎ)

நந்தியருளால்நலங்கும்பராசத்தி
உந்தியின்கீழேயுணர்வாகுமீசனை
தந்தையுந்தாயுஞ்சமனாகநோக்கிடில்
வந்துமுன்வாதமவாய்பொத்திநிற்குமே (சஅ)

நிற்குமொன்றல்லநிலையாம்வயத்தம்ப
மிக்கியபேதனம்விரைந்தவசியம்வா
முக்கியமூன்றிலொருகோடிசித்தியாஞ்
சிக்குவாணீசனுட்சிவனாகுமே (சகூ)

(பரிசுன்னம்)

ஆகுமேகஞ்சமிமிளைகுருவொன்று
பாகும்பரிதான்பத்ததின்மேற்பூசி
வேகப்புடத்தில்விளங்கும்பரிசசுண்ணம்
தாக்கியசூதரில்தாக்குந்திசைக்கொன்றே (ருo)

(சூதக்குருத்தொந்தம்)

இசைப்பட்டசூதந்திரண்டுகுருவாகுங்
கசைப்பட்டநீற்றில்காட்டக்குருவொன்று
அசைப்பட்டசைக்கவசையாமற்கட்டுண்ணு
மிசைப்பட்டதிப்படியெடுத்திடுந்தொந்தமே (ருக)

தொந்தமோரொன்பதுசூதங்கள்கட்டுண்ணுஞ்
சந்தேகமில்லைசதகோடிவேதையாம்
பந்தித்துப்பார்க்கப்பார்க்கவெகுதொழி
லங்கித்தசங்லிகியமைந்திந்தயோகமே (ருஉ)

யோகத்தொழிலுமுறவானஞானமும்
போகத்தொழிலும்புகழ்வசிசித்தியும்
வேகமிதுவிட்டால்வேறில்லையென்றேதான்
ஆகத்தில்நந்தியறைந்தான்புவிக்கேதான் (ருங)

{ காந்தம்-நிமிளை-தங்கக்களங்கு மித்திரம் அப்பிரேகச்சத்து }

புளிக்குட்காந்தம்பொலிவாயுருக்கிட்டு
கலிக்கடுவார்காகநிமிளைசமன்சேர்த்து
இவிரண்டுருகிலிதிற்சேராஞ்சூகஞ்சோ
தவியமேதங்கமுந்தாக்கக்களங்கமே (ரு௪)
களங்கந்திசைக்கொன்றுகாட்டாயாவிமேலே
தளங்கியமாற்றுத்தப்பாதுயேழாகும்
உளங்கப்பட்டாதுஉறுதியாமுப்புக்கு
மளங்கியசெம்பொன்னுமாமென்றுசாற்றிடே (ருரு)

(வங்ககுரு)

சாற்றுஞ்சுவேதநிமிளையுந்துய்யானு
மேற்றியினுக்கூட்டியிணையவுருக்கிட்டு
போற்றியேவங்கத்திற்பூட்டாய்குருவாகும்
தூற்றிடுவங்கத்திற்றலையாரசிதமே (ருசு)
ரசிதமுமேமமும்நானொனநந்தி
ரசிதமுமேமமுநலமாமேநிமிளையில்
ரசிதமுமேமமும்நாட்டும்பெரியோர்க்கு
ரசிதமுமேமமும்நற்சிவலோகமே (ருஎ)

(வேதை)

லோகநிமிளைநுணுக்கற்றகாந்தமும்
வாகானதங்கமுமாட்டிடுகாரமும்
வேகமாய்ச்சென்றுவிளைந்துவுருகையில்
தாகமாய்வுண்மண்சாற்றிடுலிங்கமே (ருஅ)
லிங்கத்தையுண்டுநீலியன்கண்டமாஞ்
சங்கையாம்லோகத்திற்சாற்றுந்திசைக்கொன்று
பங்கொத்தசெம்பொன்பரிந்தேழுமாற்றாகும்
பொங்குற்றவுப்புக்குப்போகாதுபாருமே (ருகூ)
பாருமிவைவையைந்தும்பாங்காய்வரிசையாய்ச்
சேருமினங்கண்டுசேர்ந்ததுறையெல்லாம்
போரும்பொருதுமேபோகும்வெகுதூர
மாருமறியாரறிந்தவர்சித்தரே (சுய)

(சத்துக்குமித்திரம்)

மித்திரங்கேள்வெண்ணெய்வெண்காரங்குன்றியும்
சித்திரயோரண்டந்தேன்பழஞ்சர்க்கரை
முத்தியகாடிமுதுகுளமோரொச்ச
மித்தவிதமெல்லாமெடுத்திடுஞ்சத்துக்கே (சுக)
சத்துக்குமாட்டவேதாக்குமயநாகஞ்
சத்துக்குச்சிறுமீன்தனிமேதிக்கொம்பொடு

சத்தமுயற்செவிதந்தமுழுந்தோடு
சத்துக்குழம்பாலுந்தாக்கியரைத்திடே (௬௨)

அரைப்பாய்முயல்ரத்தமாடொடுபன்றிதான்
அரைப்பானகுக்குடஞ்சுந்தரிரத்தமும்
வரைப்பான்மிதிலழிஞ்சில்வாங்கியரத்தமும்
நிரைப்பாய்நல்லப்பிரேகநீட்டியுருக்கிடே (௬௩)

உருக்கியேவில்லையாயூதிடுஞாலத்தில்
கருட்டியகிட்டமாய்க்கரைந்துமொன்றாகவே
மருட்டியகளங்குமாகவுருக்கிடும்
மருட்டியவப்பிரேகம்பின்னாதச்செய்சத்தே (௬௪)

(சத்துச்செந்தூரம்)

சத்துயிடையொடேதங்கஞ்சமன்கூட்டி
பொத்தியுருக்கையிற்போடுசமன்சூதம்
பத்தியெடுத்தறிதிபாதிசேர்கெந்தி
சத்தியாய்ப்பொற்றலைச்சாற்றிலரைத்திடே (௬௫)

அரைப்பீர்தினமூன்றுஅதிற்சத்துக்காரமும்
மூரைத்தவயச்சிமிழ்க்குவையத்துமண்செய்து
துரைத்தேபுடமூன்றுகூட்டிப்பிறித்திடத்
சரைத்தேநிறமோடுந்தானுஞ்செந்தூரம் (௬௬)

செந்தூரமொன்றுதிகழ்வெள்ளிராகிமேல்
சந்தித்துருக்கச்சத்ததிற்பசும்பொன்னும்
பந்தியாம்லோகம்பொற்பசும்பொன்னுங்காயங்கேள்
நந்திக்கவனமாமங்கோடிவாளரோ (௬௭)

கோடிதுறைக்கெல்லாக்கூட்டிடுவப்பிரேகம்
வாடியிளேக்காதுவலுக்கானபுடச்செயம்
ஓடியிளேத்துவுருகின்றமாண்பரோ
தேடியிதைப்பார்த்துத்தெளிந்துநீகூட்டிடே (௬௮)

கூட்டியவப்பிரேகங்குலாவியசெந்தூரம்
நீட்டியகுக்குடம்நீள்பீசம்விட்டரை
நாட்டியடின்றியெடைதின்னமண்டலம்
ஆட்டிக்கீறிடிக்கிற்றழியாதுகாயமே (௬௯)

காயம்வலியுங்கவனங்கொடுபோகு
மாயமலமெல்லாம்வறையறத்தீர்ந்திடு
மாயசிவானந்தமதிகமெய்ஞ்ஞானமா
மோயத்துரியத்துள்ளாயிருப்பனே (௭௰)

(அப்பிரேகக்கிண்ணியில்ரசவெண்ணெய்)

இருக்கவேயின்னமெடுத்ததுறைகேளு
மருக்கப்பிரேகச்சத்தைவாகாகச்சோதித்து

சுருக்கமாய்க்கிண்ணிபோல்கூட்டியதைவார்த்துச்
செருக்கியசூதத்தைச்சிறக்கவதில்வாரோ (௭௧)

வார்த்திடுகிண்ணியில்வைத்திடுவாலுகை
கார்த்திடுமேலேசருமத்தன்சாற்விட்டு
ஏர்த்திடுதீமூட்டியெரித்தேபிழிந்திட
நாற்றிசைமெய்க்கநவநீதமாகுமே. (௭௨)

(குளிகை)

ஆகுநவநீதமெல்லாந்திரண்டபின்
போகும்நல்லாரையிற்பொதிந்தேபுடமிட்டு
வேகுமிறுகிவிளைந்தேகுளிகையாம்
பாகுநல்லாக்கீறிப்பாங்காகயேற்றிடே (௭௩)

ஏற்றுங்குளிகையையிட்டுவாய்த்தம்பனம்
மாற்றுமரணம்வசியங்கவனமாம்
தேற்றுஞ்சட்டத்தைத்தீவினையயாறு
தோத்துந்துறைக்கெல்லாஞ்சூட்டப்பூசும்பொன்னே (௭௪)

(சத்துதங்கம்-நாகம்-சூதம்-வீரம்-லிங்கக்களங்கு)

சூட்டுமுறைப்பாடுசொன்னோயென்னந்தி
ஆட்டித்தற்சத்துமதனிடைதங்கமு
மோட்டுநவலோகமுந்திடைநாகமுந்
தாட்டியசூதஞ்சமனாயுருக்கிடே (௭௫)

உருக்குமுகத்திலுயர்நாலுக்கொள்வீரஞ்
சொருக்கிட்டிற்பாதிசுத்தித்தலிங்கத்தைச்
செருக்கிக்களங்காகுஞ்சேர்ந்தநவலோக
மருக்கிடநாற்றொன்றுஐரண்டுமாத்தாமே (௭௬)

மாத்தாகவிப்படிவைத்தார்வெகுதுறை
ஆத்தாளுடநாதமடங்காதுவண்டத்தி
லாத்தாயெழுந்துவொருகோடிசித்தியாம்
பார்த்தார்பேரியோர்பகிர்ந்தனர்நந்தியே (௭௭)

(கெந்தகச்சத்து-வேறு)

மிளகுதக்காளிவிளங்கியசாற்றிலே
யளவாகக்கெந்தியதில்ரோசநெய்க்குத்தி
தளவாயுருக்கிச்சாயைம்பதுதரம்வரை
வளமாப்பின்சாறுவார்த்துக்கொதிப்பியே (௭௮)

கொதிப்பிப்பாய்ச்சாற்றில்குலாவித்தினமூன்று
மதிப்பித்தேகெந்திவளமாகக்கட்டுண்ணும்
விதிப்பாகக்கல்வத்தில்விளங்குமேந்தாசான்று
நிதிப்பித்தசாறாட்டிநிமிரவரைத்திடே (௭௯)

அரைப்பாயதின்மூன்றுஅப்பாலேமாந்தளிர்
விரைப்பானசாற்விட்டுவிரைந்தளாமூன்றுநாள்

கரைப்பாங்களச்சிப்பருப்புநெய்மூன்றுநாள்
உரைப்பானரோசநெயயூறித்தினமஞ்சே (அ௰)

அஞ்சுதினந்தானடவாயரைத்தபின்
மிஞசியவாதகுடோரிதிசைக்கொன்று
பொஞசமைமித்திரம்பூட்டியுருட்டியே
நஞ்சங்களற்றிடும்ஞானத்திலூதிடே (அக)

ஊதிடச்சத்தாபுருகியிறங்கிடும்
வாதிடுந்தங்கமுமவளமானநாகமும்
போதிடுஞ்சூதமும்புகட்டியுருக்கிடு
வோதிடும்லோகத்துவொருநாற்றுக்கொன்றிடே (அஉ)

இட்டிடிலோகமிசைந்துபசும்பொன்னும்
மட்டுடன்குன்றியெடைதின்னக்காயங்கேள்
கெட்டுடல்போகாதுகெவனங்கொடுபோகும்
பட்டிடும்பாசம்பதியிலிருந்ததுமே (அ௩)

(கெந்தகக்கட்டு)

என்றுநற்கெந்திக்கிதமானசுத்திதான்
தன்றுமெலிச்செவிச்சாறுருடிவெண்ணெச்சி
பொன்றுமெழுத்தாணிபூணடுகரிசாலை
மன்றுகுமரியும்வார்த்தேயரைப்பதே (அ௪)

அரைத்தேயைஞ்சாமமட்வாகப்பாண்டத்தில்
விரைத்தேநற்பால்வார்த்துமேல்வண்டுகட்டியே
துரைத்தேபரிந்திட்டுச்சட்டிகொண்டேமூடி
கரைத்தேகனமேல்காட்டிடச்சுத்திபே (அ௫)

சுத்தித்தகெந்தியைச்சூட்டுமயக்கிண்ணி
மத்தசிறுகீரைவன்கிழ்க்காநெல்லியும்
கத்திரதிகாகவாரசிலைச்சாறுடன்
முத்தித்தசாறுமுருகச்சுருக்கிடே (அ௬)

இட்டேயெடுத்துஇதமானகெந்தியை
அட்டானஆமையோட்டதனிலதைவத்து
ஒட்டேநல்லுப்புமண்ணுறவாச்சீலைசெய்
மட்டேயிருசாமம்வாலுகைத்தீயிடே (அ௭)

தீயிட்டெரிக்கச்சிறுகவார்பன்றிநெய்
வாயிட்டகெந்திவளமாகக்கட்டுண்ணும்
மாயிட்டசெந்தூரமாகுந்துறைக்கெல்லாந்
தாயிட்டதுவிட்டுத்தப்பாமற்பார்த்திடே (அஅ)

பார்த்திடுங்கெந்திதான்பாங்காயளவுடன்
சேர்த்திடுஞ்செம்பத்தம்பூச்சாறுவிட்டதில்
வார்த்திடுஞ்சூதம்வளமாகவெட்டொன்று
கோர்த்திட்டரைப்பாய்க்குலாவித்தினம்பத்தே (அ௯)

பத்தாநாளானபின்பார்வைபாலுவைநெய்
குத்தியமைப்பாய்குலாவிததினமஞ்சு
மத்தியரோசநெய்வார்த்தமையைந்துநால்
உத்திடுங்குப்பியுறவாயடைத்திடே (௬௰)

அடைத்தேநல்வாலுகையடவாகநாற்சாமம்
இடைத்தேகனல்மூட்டச்செயமாகிக்கீழ்நிர்கில்
முடைத்தேமுன்மித்திறமுறுமஞ்சுமித்திரங்
துடைத்தேநற்சூதக்கனித்தோலும்வைத்திடே (௬௧)

(கெந்திசெம்பு-வேதை)

வைத்தேயுலையில்வளமாகமேலூத
அத்தேயுருகியருணநிறமாகுப
பைத்தேவியாகமபாங்காய்ப்பிறந்திடு
மூத்தேநற்செம்பிலொருகோடிவேதையே (௬௨)

வேதைக்கும்நல்லதுமெய்க்கிதுநல்லது
பாதைக்குநல்லதுபரியெல்லாஞ்செம்பாகும்
போதித்தசாறணைபோடவெகுநன்று
ஓதித்தசெம்புபோலொப்பெங்குமில்லையே (௬௩)

(வேறுகெந்தி)

குமரியின்சாற்றிற்குலாவியகெந்தியை
அமரியெரித்து ஆறதுசாமந்தான்
கமரியசூதக்கனித்தோல்சிவந்தது
அமரியிற்சூரணமதுநாலுக்கொன்றிடே (௬௪)

இட்டபின்கண்டக்கனிச்சாற்றைவிட்டரை
மட்டேயூமத்தைமாதளம்பூச்சாறு
விட்டேநற்பஞ்சமுமித்திரங்கூட்டியே
ஒட்டேத்துக்கொண்டுபழமிட்டுலர்த்திடே (௬௫)

உலர்த்திடும்வில்லையையொக்கவேகொட்டிடு
பிலத்திடுநாழத்தில்பேசாமலூதிடு
மலத்தைக்கழித்துமணிமணியாவிழும்
பிலத்தாவியிதுபின்னெதிரில்லையே (௬௬)

எதிரில்லைசெம்புமேலேத்தவகைசெம்பு
மதிரில்லைப்பொன்மேலேயையாறுகொன்றிடு
வெதிரித்தவாளையவிளாந்துசரிகூட்டு
அதிரித்துதின்னஅழியாதுகாயமே (௬௭)

அழியாமற்பொன்மேலேஅஞ்சியுந்தொந்தனை
வழியானசூதத்தைவளமாய்ச்சரிகூட்டி
கழியாதுயேமத்திற்காட்டஞ்சுதொந்தனை
ஒழியாதுவெள்ளிமேலொருமூன்றெடுத்திடே (௬௮)

(கெந்தகச்செம்பு.)

எடுத்ததோர்தாரத்தையியல்பாகச்செம்பின்மேல்
கொடுத்திடுவானங்குலாவிப்பதினாறாய்
தொடுத்ததுறைக்கெல்லாஞ்சூட்டவெகுதூர
மடுத்திட்டகோடிக்குமப்பாலேயோடுமே (௯௯)

(மயூரச்செம்பு வேறு,)

ஓடுமயூரமுருகின்றவீகசத்தை
நாடிநறுக்கிநறைக்காட்டிவிட்டுவை
ஏடயெருமையிதமானசாணியில்
கூடியடைபோலக்குலாவியுலர்த்திடே (௱)

உலர்த்தியேபாண்டத்திலுறுசாரம்வெண்கரு
குலத்தூரிற்றீயாற்குமையவெரித்தெடு
பிலத்தகுடோரியும்பின்னஞ்சுமித்திர
மலர்த்திடநாழத்திலசையாமலாகிடே (௱௧)

ஊதுரவியிலிரண்டுசொன்னத்தைச்
சேதுரசம்விட்டரைசேர்சமனெக்க
ஓதுகடுநெல்லியுயர்ந்தகாணிச்சாறு
வீதித்திறிதினம்விட்டேயரைத்திடே (௱௨)

அரைத்தேயுருட்டியதுமேலேதாஞ்சுத்தி
விரைத்தேநல்லப்பிரேகசத்துக்கழஞ்சியும்
துரைத்தேநல்லண்டத்தோல்சூழவர்க்கம்பால்கிட்டம்
பரைத்ததனல்மேலேபாங்காகவூதிடே (௱௩)

பாங்காக்களங்கம்பளிச்சென்றுகண்டாற்போல்
நீங்காமற்குன்றிநிலைத்துண்ணுமண்டலம்
போங்கானமேனிபொன்போற்புகழுறும்
வாங்காகவெவ்வனமாமயேசுரனாவாயே (௱௪)

(பூநாகச்செம்பு)

ஆமிக்களங்கமஞ்ஞாற்றுலோகத்தில்
நேமித்துவொட்டநிலைக்குமையாயிரங்
காமத்தின்விற்கேள்கண்ணுங்களர்கொள்ளச்
சாமத்துரோகம்போஞ்சதாசிவனாவாமே (௱௫)

(பூநாகமெடுக்கும்-வகை)

ஆமேகம்பூமியிலடங்கியபூநாகம்
தாமேவுவெல்லாந்தான்சாற்றுவரைவைக்கல்
வாமேவுதேசிகன்மலமும்புதைத்திடு
ஓமேநற்பூநாகமொக்கக்கிடைக்குமே (௱௬)

கிடைத்தெடுத்துக்கிளர்ந்திடும்பாலிலே
மடைச்சேனம்மான்மயிடத்தின்காணியில்
உடைத்தேயடைதட்டியுருகவுலர்த்திடு
கடைச்சேநற்பாண்டத்திற்கனல்கொண்டெரித்திடே (௱௭)

எரித்திட்டசாம்பலிதமாகக்காடியில்
வரித்திடுவாதக்குடோரிதிசைக்கொன்று
மறுத்தஞ்சுமித்திரமடிவாகவில்லைசெய்
பொருத்திடுஞாளத்திற்போட்டடங்குவூதிடே (௱௮)

ஊதாவியாயுருகுமதுபாரு
பாதகந்தீரும்பரிசத்தில்வேதிக்கும்
ஆகிப்பரிரண்டியதிலேயிதுவொன்று
சோதிச்செயரகஞ்சூட்டிருருக்கிடே (௱௯)

உருக்கியகல்வத்திலுடைத்துப்பொடியாக்கி
நெருக்கியிதினிடைநீட்டிஜெபகெந்தி
பெருக்கியவோரிலைப்பொற்றலைச்சாற்றிலே
செருக்கிவையைந்தினஞ்சேரவரைத்திடே (௱௰)

அரைத்தேயுலர்த்தியழகாகப்பில்லைசெய்
உரைத்தகுகையில்வெண்காரமுங்கார்ன்சேர்த்து
நிரைத்தப்படியேதானேடுமண்சிலைசெய்
புரைத்தேயுருக்கிப்பூசித்தெடுத்திடே (௱௰௧)

பூசித்தெடுக்கப் புசழாங்களங்காகும்
நேசித்துக்குன்றிநிலைத்தொருமண்டல
மாசித்துவந்திடுமகாயோகிதானவன்
தேசத்தோர்போற்றத்திரிவான்கவனமே. (௱௰௨)

கவனமொன்றல்லசாணீர்களங்குதா
னவலோகமஞ்சிநாலாயிரற்குத்தான்
மூவசனிசியோடுமுயர்ந்தபசும்பொன்னு
மவனித்துயீசனைவணங்கியேசெய்திடே (௱௰௩)

(செம்புப்பொன்)

இனிமைநாகமும்லிங்கமனோசிலை
தனிமையாகியசாதியிருல்வரும்
வனிதனாகியவங்கோலநெய்யுரில்
புனிதனாணையேசெம்பொன்னாகுமே (௱௰௪)

பொன்னாகுஞ்செம்புமேற்பூட்டிடுஞ்சூதத்தை
தன்னிறைகெந்தியைத்தாக்கவேகுப்பியில்
மன்னியயந்திரவாலுகைமேல்வைத்துப்
பொன்னட்டராசனைப்போற்றியெரித்திடே (௱௰௫)

எரித்திடுசெந்தூரமெடுத்தேதினங்குன்றி
யரித்திடுபாற்சேரவைபத்தியம்பெற
விரித்தகமலரோன்விதியும்பொய்யாய்விடு
மரித்தேநிற்போர்க்குமார்பிணிலாணியே (௱௰௬)

(உருக்குமித்திரதயிலம்-வேறு.)

காணுமேமித்திரங்காட்டினரிம்மூன்று
வேணியவண்டக்கருவெள்ளைக்குன்றியு
மாணிப்படிகியடவாயனைத்தபின்
நாணுஞ்சதாவிரிநாட்டுடன்தயிலமே (௱௰௭)

தயிலமுமித்திரஞ்சாற்றிடுஞ்சங்குமேல்
தயிலமுமித்திரஞ்சாற்றுஞ்சலாண்டமேல்
றயிலமுமித்திரஞ்சாற்றிலண்டத்தினில்
தயிலமுமித்திரந்தானதுஞானமே (௱௰௮)

ஞானமேதோவென்றுநலங்காத்தமாண்பமோ
ஞானத்திலுத்தமம்நல்வங்கருளந்தான்
ஞானத்திலுதநலங்காக்கரடாகும்
ஞானத்திகாரமுநாட்டியுருக்கிடே (௱௰௯)

உருக்குமுறைபோலுதிடவண்டத்தை
உருக்குமுறைபோலுதிடுசிப்பியை
உருக்குமுறைபோலுதிடுநண்டோட்டை
உருக்குமுறைபோலுதிடுமத்தியே (௱௨௰)

அக்கமுதலாகஅல்லாமாவியாகு
மத்திக்கச்சூதத்தைவாசனைக்கேகொல்லும்
வத்தித்தப்பாத்திரம்வைக்கமுறைபாடு
கத்திப்படாதென்றுகாட்டினார்நந்தியே (௱௨௰௧)

(நிமிளைச்செம்புசெந்தூரம்)

காட்டுநிமிளையில்காட்டமித்திர
மாட்டுமூன்மித்திரம்வளமாய்ப்பிசைந்திட்டு
தாட்டுசதாவேரித்தயிலமுறவார்த்து
யட்டியேஞாழுத்திலுறவாகவூதிடே (௱௨௰௨;

ஊதிடச்செம்பாமுருக்கெட்டுப்போகாது
மாதுகேள்தங்கத்தின்மாட்டிடைச்சேர்சம
னதிசெயமாகுமவ்விடைதான்கூட்டி
சாதித்துவொன்றாகத்தாக்கியுருக்கிடே (௱௨௰௩)

உருக்கிடச்செந்தூரமூபர்ந்தவருணன்போல்
தருக்கிடக்கெந்தியுந்தாரமும்வீரமும்
செருக்கிடமூன்றையுஞ்சேரக்குகையில்வை
பருக்கிடப்பரிதியின்பசுஞ்செந்தூரமாமே (௱௨௰௪)

செந்தூரமானதைசேர்ந்தரவிமதி
பந்தறவாகவேபத்துக்கொன்றீயவே
வந்தவரையறும்வாகானதங்கமாம்
இந்தமுறைதிருமூலருரைத்ததே (௱௨௫)

உரைத்தேயெடுத்துஉள்ளடைகுப்பியில்
விரைத்திடுவாலுகைமேல்வைத்துத்திமூட்டு
துரைத்திடுஅஞ்சாந்தூசுறுசெந்தூரம்
கரைத்திடுகாணிகாயமழியாதே (௱௨௬)

அழியாதுகாயங்களையாயிரத்தாண்டு
வெளியாநவலோகத்தோராயிரமோடும்
வளியாய்ப்பரிதிக்கமாற்றுப்பதினாறு
தெளியாதயோகிக்குச்சித்தியொன்றில்லையே (௱௨௭)

(வேறு)

என்றேவயத்திலெடுத்தவராட்டிப்பொடி
நன்றாக்கழுவிநல்லோரிதழ்த்தாமரை
கொன்றேயிடித்ததில்கூட்டுவேன்கண்டிரும்
பணடேயிடைகாரிபகர்சாரமாட்டிடே (௱௨௮)

(காந்தச்செம்பு)

மாட்டிப்பிசைந்துமகிழவேமூன்றுநா
ளாட்டிப்பிழிந்துவச்சாற்றிலயமூற
வோட்டியவெய்யலிலுருகவையேமூநாள்
காட்டியகாரங்கலந்துபிசைந்திடே (௱௨௯)

பிசைந்திடுகோவைபெருங்குறட்டைப்பழ
மசைந்தேபிசைந்துஅமர்த்திக்குகைவைத்து
பசைந்தவுலைக்குள்ளேபாய்ச்சியுருக்கிட
வசந்திரவேழ்தரம்வளமாயுருக்கிடே (௱௩௰)

உருக்குக்குருக்குவுடைத்தேகறண்போக்கி
பருக்கும்பழம்ரண்டுபாங்காய்ப்பிசைந்திடு
நெருக்கியுருக்கிடநிச்செயஞ்செம்பாகும்
கருக்குத்தொழிலென்றுகூட்டினார்நந்தியே (௱௩௧)

(செம்புகளங்குவெட்டைசெந்தூரம்)

கூட்டியேசெம்பாலேசூழ்சமன்தங்கஞ்சேர்
மூட்டியகெந்தியுமுனையற்றசூதமும்
நீட்டியெருக்கம்பால்நிலைத்தரைலேகித்து
ஆட்டிப்புடமஞ்சில்தீய்ந்துநுறுங்குமே (௱௩௨)

நுறுங்கியசெம்பைவூகிடராவியின்மேல்
மருங்கிக்கொடுக்கவேமாற்றுப்பதினெட்டாங்

தருங்கிமறுகாதுதற்கிக்குமுப்போடே
பொருந்தியசெந்தூரம்போடமுறைகேளே (௱௩௩)

கேளாயயச்செம்புகெடியாய்ப்பலமொன்று
வாளாகுந்தங்கம்வகைபிதுகாற்பலம்
மாளாஞ்செயநாகமைந்துஞ்சரிகூட்டி
சூளாஞ்செயசூதஞ்சூட்டும்பலமொன்றே (௱௩௪)

பலமானகெந்தியைப்பாய்ச்சியிதுக்கிடை
பலமாங்குமரிப்பால்வார்த்தரைத்திடு
பிலமானவாலுகைபேசாமல்வைத்திடு
குலமாந்தினமாண்டில்கூடுஞ்செந்தூரமே (௱௩௫)

செந்தூரமொன்றுதிகழ்வெள்ளியாயிர
மந்திக்குருக்கமாற்றுப்பதினாறு
கொந்திபொன்னாகுங்கூட்டுதினங்குன்றி
பந்தித்துத்தின்னப்பத்தஞ்சிற்சித்தியே (௱௩௬)

சித்திக்குங்காயஞ்செகமெல்லாமெச்சிட
உத்தரத்துப்பார்க்கயொளிவிடுமேனிதான்
மத்தித்துலகைவருவான்கெவனந்தான்
புந்திக்குஞ்சித்திக்கும்போக்குமுறையாமே (௱௩௭)

ஆமேதானிப்படியடவாயயம்போலே
போமேநற்செம்பாகிபுகழுற்றகாந்தந்தான்
தாமேவுவேதையுந்தனிக்காயசித்தியும்
வாமேவுகாந்தத்தைவைத்தமுறைபாடே (௱௩௮)

(படிகச்செம்பு-வேறு.)

படிகக்கல்லதனைப்பாங்காய்ப்பொடியாக்கி
அடுகும்பொடிதானம்மாபலம்பத்து
நெடியவெண்காரம்நிறைதான்பலமூன்று
கொடியதோராவாரம்வேர்பலம்பத்திடே (௰௩௯)

பத்துப்பலந்தான்பாங்காயயப்பலம்
முத்துயர்கற்றாழைவேரோர்பலம்பத்து
ஒத்துஅரைத்துவுறவாய்மும்மூர்த்தியும்
மூத்தேநற்றாணிக்கரிப்படவாகிடே (௱௪௰)

ஊதிப்படிதானொருமூன்றுதாமிதை
பேதித்துக்கல்லுபிரண்டிடும்வெண்மையா
மாதித்தவெண்மைக்கதினிடைசூதஞ்சேர்
கோதிப்பழச்சாற்றால்குலாவியரைத்திடே (௱௪௧)

(பரிச்செம்பு)

அரைத்தேயதுக்குளடவாங்குடோரியுங்
அரைத்திடுயெட்டொன்றுகூட்டிடுகோரமூங்

தனாத்தேனுருட்டித்தானுங்குகைவைத்து
குணாத்தேகுறையுங்குழம்புமிதிலிட்டே (௱௪௨)

இட்டேயுருக்கயியல்பாகச்செம்பாகு
மட்டில்லைவேதைதான்வாக்குக்குமெட்டாது
ஓட்டுமிடையொன்றிலொருநூறுதங்கஞ்சேர்
பட்டுடன்தங்கம்பாரீர்பறிச்செம்பே (௱௪௩)

பறிச்செம்புவெள்ளிமேற்பாய்ச்சிடுநூற்றொன்று
மரிச்சுரசிதம்வளம்படச்செம்பாகுங்
கரிச்சரவியொன்றுகருநாகமணாதநிடு
மரிச்சகரிநாகமாணிநற்செம்பொன்னே (௱௪௪)

{ படிகத்தின்செம்பும்-கெந்தகச்செம்பும்
இதுகளில்களங்குசெந்தூரம் }

செம்பாங்கருநாகஞ்சேர்ந்தயெடையொன்று
வம்பொன்னுநாகமொருநூற்றிலேயிடக்
கொம்பித்தநாகங்கூட்டிக்களங்காகும்
நம்பியேநற்செம்புநாடொறுநூறுக்கே (௱௪௫)

நூறுக்கொன்றோடிநுகர்ந்தபசும்பொன்னுந்
தாறுற்றவொன்பதுலோகமுந்தங்கமா
மாறுற்றகுன்றியெடைதின்னமண்டலங்
காறுற்றமேனிகழியாதெக்காலமே (௱௪௬)

காலமாஞ்சொர்ணக்கணேசன்பைரவன்
சீலமாந்தேவிசிறக்கவேவார்த்திட
வாலையம்போகர்மலையாமற்காமியஞ்
சாலவுண்டாயிரஞ்சாகானெக்காலமே (௱௪௭)

எக்கிப்படிகத்திறங்குஞ்செம்போர்பத்து
மக்கியகெந்தகச்செம்போர்பலம்பத்துந்
தக்கியசெம்புதானும்பலம்பத்தும்
பக்கிநிமிளைப்பகர்பத்துச்செம்பிதே (௱௪௮)

செம்பொடுநாற்பதிற்செம்பிதே
நம்பொடுமூன்றும்நலமுடன்விக்கிரகம்
கொம்பாமற்பாதத்திற்கொட்டநவலோகம்
வன்பானதங்கமாமாற்றுமறுபதே (௱௪௯)

மாத்தாநவலோகம்வழங்கும்புவியெல்லா
மாத்தானுக்காவின்பாலபிஷேகஞ்செய்திட்டு
சேர்த்தாலொருசேனைதினமூன்றுகொள்வோர்க்கு
காத்தேதுதீயேதுகவனமாஞ்சித்தியே (௱௫௰)

(செந்தூரம்)

சித்திக்குஞ்செந்தூரஞ்செப்பினேனன்னத்தி
மத்திப்படிக்குப்பகிர்ந்தவயச்செம்பு

மொதநிக்குங்காந்தமூருவானநற்றங்க
மந்தித்தவப்பிரேகச்சத்தந்திடையிடே (௱௫௧)

இட்டயிடைபோலிதிற்சங்கச்செம்பிடு
இட்டயிடைபோலிதிற்சங்கச்செய்பிடு
இட்டயிடைநன்றிதமாங்கிளிஞ்சியிரு
ளிட்டயிடையதிவிதமாயுருக்கிடே (௱௫௨)

உருக்கியபதத்திலொத்தசெயசூதம்
நெருக்குமிடைக்கொக்கநேரேஜெயகெந்தி
யருக்கியகேசரித்தயிலத்திலேயரை
பருக்குமயக்குபகிர்ந்துபுடஞ்செய்யே (௱௫௩)
செய்தேபுடமஞ்சுதீரச்செந்தூரமாம்
மெய்திடுமொன்பதில்மாயிரத்தொன்றுமே
கைபடாமுன்னேகனகமயமாகும்
பொய்படுஞ்சாவும்போகாதுகாயமே (௱௫௪)

(பத்திரம்)

போகாதபத்திரம்பூட்டமுறைசேரு
வாகானமுன்பத்தும்வளமாமயூரமு
மேகாநியிளையிசைந்தபூநாகமு
மூகாதகெந்தியுமூநிறசெம்பெடே (௱௫௫)
எடுத்திடுஞ்செம்புமிதமாய்ப்பதினாலு
மடுத்தசெயசூதம்வகையோர்பதினைந்தும்
தொடுத்தேயுருக்கிச்சூட்டிக்குகைவார்த்து
யடுத்தேநல்லாமைநெய்திற்பூசிவைத்திடே (௱௫௬)
வைத்தேகுகைக்குள்ளேவளமாமினிநாக
மொய்த்திடத்தங்கமுமிட்டதிற்கெந்தியுங்
குத்தனாரோமநீர்குகையிதுவைத்துமே
ஒத்ததேவிளக்கிடவுயர்ந்தசெந்தூரமே (௱௫௭)

(களங்குசெந்தூரம்)

செந்தூரமொன்றுதிசைலோகத்தாயிரஞ்
சந்திக்கச்சேர்த்துண்ணத்தனிக்காயசித்தியா
மிந்திக்குகைக்குள்ளேயிட்டுநற்சூதத்தைப்
பந்தித்துவூதிடப்பத்தனாகாணுமே (௱௫௮)
காணுமெப்படிகளங்கங்கள்செந்தூரம்
மாணுங்குருக்கள்வரச்செய்யலாகும்
நாணுமேசூதம்நல்கறக்கட்டுண்ணும்
பேணுமேகாயத்தைப்பிறப்பிறப்பில்லையே (௱௫௯)

(செந்தூரம்-வேறு

கெந்திரவியுங்கெடியானபூநாகம்
பந்தித்தசூதம்பதியோடிதுநாலும்

வந்தித்தெந்திவளமாய்சரிசேர்த்து
எந்திப்பழமூமிடுபால்குமரியே (௩௬௰)

குமரிப்பலோடேகூட்டுசெருப்படி
யமூரிபொற்றலைச்சாற்றுலமைப்பது
தமரிடசாமங்கள்தானெட்டடைப்பது
திமிரியேகுப்பியிற்சேர்த்துக்கெரித்திடே (௩௬௧)

எரித்திடுசாமமெட்டிரண்டாகவே
வரித்திடுசெந்தூரம்வருணவருணனக்
காரத்திடுநாற்றொன்றுகூட்டிடுதங்கமேல்
விரித்தேயிதைப்பின்விடுநாற்பிலொன்றிடே (௩௬௨)

(நவகோடி பரிச்செம்பு)

இட்டேபரிச்செம்பையெடுத்தேகுடவன்மேல்
பட்டியநூற்றொன்றுபாய்ச்சுப்பரியாகு
மெட்டென்றநவலோகத்திடுபதினாயிரங்
கட்டொண்ணாச்செம்பிதுகாணிப்படிசென்னே (௩௬௩)

இப்படிகெந்தியெடுப்பாய்பூரமு
மிப்படிகெந்தியெடுப்பாயயசெம்பு
மிப்படிகெந்தியிடுமிந்திக்கோபமு
மிப்படியுங்கழல்மாதனமெடுத்திடே (௩௬௪)

எடுத்ததுறைக்கெல்லாமெடுத்திடுமேமத்தை
எடுததுறைசேருமெண்ணாயிரத்தி
எடுத்ததுறையெலலாமிசைந்துண்ணச்சித்தியாம்
எடுத்ததுறைதின்னஎண்கோடிவாழ்வரோ (௩௬௫)

வாளவேபூநாசம்வாங்கியசெம்புபா
லேளையேயிந்திரகோபமுஞ்செம்பொடு
நீளியகெந்திரவிபோணிமிளையு
மாளியசெம்பாகுமப்படியூகிடே (௩௬௬)

(மித்திரப்பம்)

ஓரிலைத்தாமரையுறவாலமூரியும்
பாரிலைக்கோவைபடர்புளியாணைகேள்
சிரில்சிறுகீரைசெங்கொடிவேலியு
மாரிச்செந்திராயதிலங்கியபாதியே (௩௬௭)

பாதிப்பிடாமுக்கிபகருங்கரிச்சாலை
சோதியசெம்பல்லிசேர்ந்தபதினொன்று
பேதித்துவெவ்வேறுபிழிந்தங்கேவைத்தபின்
ஞாதித்தன்மூன்றில்நாதம்வரும்பாரோ (௩௬௮)

பாரோநற்சாற்றில்பகர்மூன்றுமித்திரம்
நேரோபிசைந்துதினாநாலுமித்திர

மோரோயுலையிட்டூதிடப்பற்பமா
மாரோயிதனுள்ளேயயமித்திரமிடே (௱௬௯)

இட்டதிசைக்கொன்றிடுவாய்குடோரியு
மட்டப்பிசைந்துவளமாசலூதிடப்
பட்டேமலம்போக்கிப்பார்க்கரவியாகும்
தொட்டமாச்செம்புசூதக்கதைக்கொல்லுமே (௱௭௰)

(செந்தூரம்)

கொல்லுமுன்செந்தூரங்கூட்டுமுறைசேரு
நல்லசெயசூதம்நலமாம்பரிச்செம்பு
மெல்லியேமூலிகைச்செம்பொடிதுமூன்று
மெல்லாமுறவாயுருக்கியிருக்குமே (௱௭௧)

இருக்குமணிக்குயெடைக்கெடைகந்திசேர்
மருக்கியபொற்றலைமாதளம்பூச்சாறு
நெருக்கும்புரசப்பூநீள்செம்பருத்தம்பூ
பருக்கின்றவங்கிசபாதிச்சாற்வார்த்திடே (௱௭௨)

வார்த்தேயரைப்பாய்வளமாய்த்தினமஞ்சு
கோர்த்திடுங்குப்பியிற்கொட்டிடுவாலுகை
ஏர்த்தேயடுப்பின்மேலெரிப்பாய்தினமொன்று
சேர்த்தேயருணன்போற்செந்தூரமாகுமே (௱௭௩)

செந்தூரமொன்றுசிறந்தநவலோக
மந்திக்கிராயிரமடங்காப்பரியாகுங்
கொந்திக்கன்குன்றிக்கூட்டொருமண்டலஞ்
சிந்தித்தமேனிசிறுகதிர்மேனியே (௱௭௪)

மேனிபதினொன்றில்வெவ்வேறுசாய்பிரம்
பூனியேமுன்போலப்பூட்டிடுசெந்தூரங்
காணினவலோகங்காயமுஞ்சித்தியாம்
பாணியேயென்னக்கிபகிர்ந்தமுறைபாடே (௱௭௫)

(அயச்செந்தூரம்.)

ஊதியசங்கமுடன்னடநண்டோடு
நீதிக்கீழிஞ்சிமிமிளையயச்செம்பு
மாதியகெந்திபூரமேபூநாக
மேதியகாந்தமிடுமிந்திரகோபமே (௱௭௬)

எடுத்தவயச்செம்புமிதமாய்ப்பதினொன்றும்
படுத்திடுமூலிகைச்செம்பிற்பதினொன்றுங்
கொடுத்துப்பதின்மூன்றுங்கூட்டிருபத்தைந்து
மடுத்தசெயரசமதினோடுருக்கிடே (௱௭௭)

உருக்கியேகல்வத்துடைத்தும்பொடிசெய்து
நெருக்குமிடைகெந்திநேர்புரதாசுள

ளருக்குமுருக்குடனுதிசாக்கொன்றை
பருக்கியமாதளைப்பாங்காய்க்குமரியே (௱௭௮)

குமரிப்பூசன்றேடேகூட்டிடுபொற்றலை
அமரப்பிழச்சாற்றிலல்லாவணைகப்பூவுங்
திமிரிப்பிழிந்துதினமொன்பதேயரை
தமரித்தகுப்பியிற்றூக்கியடைத்திடே (௱௭௯)

அடைத்திடுவாலுகையடவாயெரித்திடு,சடைத்தேதினமூன்று
தணவிடச்செந்தூரம், படைத்தேபடுமுன்னேபரிசவேதித்திடுந்திட
த்திளில்வீசங்காணதின்பீர்தினம்பத்தே (௱௮௰)

தினம்பத்திற்காயஞ்சித்தியாங்கேசரம், புனம்பத்துப்புவனங்க
ள்போவான்கெவனத்தான், அனம்பக்கரிகரப் பிரமாயிவன் முன்
னேமுனம்பத்திநிற்கவேமூர்ச்சித்துவீழ்வரோ (௱௮௧)

வீழ்துபதங்கம்விளங்கவுருக்கிடு, ஆழ்கியசெந்தூரமாயிரத்தொ
ன்றிடு, வாழ்குதற்றொக்கினவளமாகபபற்றிடு, தாழ்குநல்தூர்த்தி
ரமூக்கொருதொந்தமே. (௱௮௨)

தொந்தத்திலொன்றுகூட்டுநவலோகம்,பத்திக்குமாற்றுபார்த்
தாறுகண்டிடு,இத்தத்துறைபொன்போலத்துறைக்குமில்லை,எத்தித்
தசெய்யிலெடுத்தகுகைகேளே, (௱௮௩)

செம்புக்குகை.

குகைவார்க்கமுன்செம்பு கூட்டிருபத்திரண்டு, வகையாகத்த
ங்கம்வளமாகவெட்டிடு, துகையாகமுப்பது கூட்டக்குகை வார்த்து
பகைதீரப்பார்த்ததைப்பார்த்துவணங்கிடே. (௱௮௪)

வணங்குஞ்சரக்குவகையானதெட்டெட்டும், பிணங்கியலோக
ம்பிலமானதொன்பதுங், தணங்கிக்குகைக்கிட்டுத் தணலாகச்செந்
தூரங்,குணங்கொள்ளலோகத்திற்கோடிக்கும்வேதையே (௱௮௫)

வேதைக்குளுக்கும மெய்க்குமகாசித்தி, மாதைக்குகைக்குள்
ளேவைக்குமூலங்குகுந்தசாம், பாதைக்கெவனமாம்பரிசவேதித்திடு,
மோதக்குளிகைக்குவொப்பொன்றுமில்லையே. (௱௮௬)

மூலிரசாயம்-வேறு.

முறையாசயிய மூளைக்கவேமூளிகைத், துறையாம்பொன்னாங்
காணிகுழஞ்சுணாசிந்தி,மறையாம்விழுதிமருவுஞ்சிறுபூளை,கறையா
ஞ்செருப்படிகாட்டுமூசுட்டையே. (௱௮௭)

மூசுட்டையுடனேமுத்தெருக்கன்செவி, ஒசிட்டவுத்தாமணியு
யர்வெள்ளைச்சாறணை, பசிட்டவெள்ளறுகு பாங்காய்ப்பதினொன்று
மசிட்டவேரோசித்ததில்ரசம்வாங்கிடே. (௱௮௮)

வாங்கியதுக்குள்ளேமாட்டுநாள்மித்திரம், பாங்காய்குடோரிப
கருந்திசைக்கொன்று,ஓங்கியுருகியுருகப்புடமிட்டுத், தாங்காமலூற்
றத்தப்பாதுயியமே, (௱௮௯)

ஈயமிடையொன்றெளியிரும்போரிடை, மாயநல்நாகம்வளமா கவோரிடை, காயக்கனகக்கலந்தேயிடையொன்று, ஆயுஞ்செயசூத மதின்மூன்றிடையிடே. (௱௯௰)

காற்பாசிசத்துபதங்கம்,

இட்டேயுறவாயிதமாயுருக்கிட்டு, மட்டாகக்கெந்தி வளமாய்ச் சரிகூட்டி, ஒட்டாய்ப்பிடித்துவுறவிடுகுப்பியிற், கட்டானவாலுகை காட்டித்தனல்மூட்டே, (௱௯௧)

மூட்டதுசாமமுகில்போலேசெந்தூரங், காட்டேயொருநாறு கனகநவலோகம், தீட்டவேகுன்றிதினந்தின்னமண்டல, மூட்டவே சித்தியாமுயர்ந்தமுறைபாடே, (௱௯௨)

மூறைபாடுகேளுமுலவைசயித்தால், அறையாய்த்திரிவங்கம னுமிடக்கட்டுன்னு, மறையானசூதமும்வாசனைக்கேசாகுங், குறை யாக்குளிகையாங்கோடிக்கும்வேதையே (௱௯௩)

வேறு.

கற்பாசிசத்துகாணீரிடைநாலு, பற்பவளப்புற்றுப்பகுந்ததிடை மூன்று, நற்பானகெந்தகா ணட்டுமிடையொன்று, வற்பாங்குடோ ரிவரிசையனைகூட்டே, (௱௯௪)

கூட்டியரைத்துக் குழப்பியதுமூன்று, மூட்டியெரிக்கவுறுதிப் பதங்கமாம், நீட்டும்பதங்கம்நிறைந்தயிடை யொன்று, ஆட்டியகற் பாசிசத்ததுநாவிலே (௱௯௫)

நாலொன்றுமைந்தும்நற்றங்கமொன்றதை, ஏலொன்றகட்டியி ருநாகமொன்றனை, வாலொன்றுசூதம்வளமாசமூன்றிடை, பாலொ ன்றிப்பார்க்கப்பதினொன்றும்பாருமே (௱௯௬)

குளிகை

பாரமிதுவெல்லாம்பகுக்தநற்கல்வத்தில், வாருமந்திஷ்டிவள மாமழிஞ்சிவேர், பேருமரேசண்டம்பிளிசெங்கியித்திறுதிவருயர்வெ ண்ணெச்சிபெருமையின்வெண்ணெயே, (௱௯௭)

வெண்ணெயுடனே விருத்தபழங்காடி, கண்ணியகாஞ்சோறி காட்டாய்மூசல்ரத்த, மண்ணைக்கரைக்குமகத்தாங்கிராவக, முண் ணியகோசலமொக்கப்பதினென்றே (௱௯௮)

அரைப்பிர்தினமொன்று அடவாய்ப்பதினென்று, விரைப்பிரம யூரம்விளங்கியசெம்பொன்னுந், திரைப்பிய வெள்ளிதிசையிட்டுருக் கியே, கரைப்பிரரணிபோற்சாணிதைச்செய்திடே, (௱௯௯)

செய்தசிமிளில்மூன்சேர்த்தமருந்தூட்டி, அய்தவடைத்துவது மேலாக்கூட்டியே, மெய்தவசோகவிருட்சத்தின்மூலம்வை, மைதொ ருமண்டலம்பாங்காய்ப்புதைத்திடே. (௨௱)

புதைத்தேசெய்திட்டுப்பொங்கமசாரத்தை, மதத்தேநற்சித்தர் சன்வாராமற்கட்டிடும், திதத்தேசிவபூசைநீளன்னதானஞ்செய், பதத் தேயெடுத்தபின்பாங்காங்குளிகையே. (௨௱௧)

குளிகைதிறக்கக்கூறுபதினொன்று, மளிவெல்லாம்போக்குமதி னுட்வர்ன்னங் கேள், தெளியாகும்வெள்ளை சிவப்புகறுப் போடும், நஞுவாதபச்சைநாட்டும்பசுமையே. (௨௱௨)

பசுமையோடைந்தும்பருந்தகுளிகைப்போர், பசுமைதரித்திரம் பத்துங்கமலினி, வசுமையாயிட்டுவாய்நீர்படிலொக்கும், பசுமையா ய்மாற்றுவோர்பத்துடனைம்பதே, (௨௱௩)

ஐம்பதென்றல்லவதின்வித்தைமெத்தக்கேள், வன்படுதீய்த்தா ன்வளமையாய்க்குளிர்ந்திடுந், தன்படிவாரிதிசணத்திலேவற்றிடு மெ ன்படுதேகமெடுக்குங்கெவனமே. (௨௱௪)

எடுக்குங்கெவன மிருந்திட்வாயிலே, மடுக்குஞ்சலமுண்ணமா யாதுகாயந்தான், ஒடுக்குந்தெரிசன மொன்பதும்லோகத்தில், அடுக் குங்குளிகைமேலப்பாலொன்றில்லையே. (௨௱௫)

வேறு.

அழிஞ்சில்தயிலம்.

அழிஞ்சிபெருக்குவதனீர்புரசோடுகழுஞ்சியமுள்ளிகடுங்கண் டங்கத்தரி, வெழுஞ்சியகுன்றிவெள்ளைக்கருங்குன்றியாம், தெழுஞ் சியமாறகந்தேவநற்றுளியே. (௨௱௬)

தாளியிஞேடுசாறணையின்பூஞூமத்தை, ஆளியகஞ்சாவட்வான வேரண்ட, மாளியபுன்னைமாலாவாலுவைகேள், நாளீர்சமன்கூட்டி நாட்டியரைத்திடே. (௨௱௭)

அரைத்தமருந்துசேளந்தவேர்சாறூடே, விரைக்கியவெள்ளா ட்டுப்பாலும்விட்டேயரை, உரைக்கவேதாலத் திலுறவைப்பாய்வெ ய்யலில், சுரைக்குந்தயிலமாய்த்தானேவடியுமே. (௨௱௮)

ரசகுளிகை.

வடிஞ்சதயிலம்வகையாய்ப்பலமொன்றுகடிஞ்சிடுஞ்சூதத்தை க்காட்டுபலமொன்று, உடிஞ்சகல்மூசையுறவைத்துமெள்ளு, படிஞ் சக்குளிகையாம்பாரிதான்வேகமே. (௨௱௯)

வேகவராகம் விளங்குநல்மாண்டலைப், பாகுநற்குக் கிடம்பகிர் ந்ததலைமூன்று, மேசமாய்க்கூட்டியெடுத்தேதயிலத்தை, வாகாய்க்கு ளிகைக்குவார்த்திடுவொம்பவே. (௨௱௰)

வார்த்தேயடுப்பில்வளமாகக்காய்ச்சிட, கோர்த்தேகுடிகைக்கு ங்குளிகைமூகங்காட்டு, மேர்த்தேநல்வாயிலிருக்கவதிசயமார்த்துஞ் சலம்வன்னிவாக்குந்தம்பிக்குமே. (௨௱௰௧)

தம்பிக்குஞ்சுக்கிலஞ்சகலவசியமாம், வம்பித்திரிநாகம்வாசனை க்கேகட்டுங், கொம்பிக்கெவனங்கொடுபோகும்போரிந்து, நம்பிந்த சாறணைநாட்டுமுறைகேளே. (௨௱௰௨)

சாறணை.

சாறணை செய்யவே சாற்றுமருந்து கேள், தோறணவாழைது ணையாங் கொடு வேலி, ஆறணமுள்ளங்கி யமைந்த ஆடாதோடை, மோறணையூமத்துமுறியபாமார்க்கமே. (௨௱௰௩)

மார்க்கத்திற்றுழை வன்தேவதாளியும், ஏர்க்குற்றவெள்ளூமித மாஞ்சதுர்க்கள்ளி, போர்க்கம்புரசு புனலின் முருங்கைகேள், சீர்க் கொடிக்கள்ளிசிம்புராவெச்சமே. (௨௱௰௪)

எச்சமுதலாயிதமாகவெவ்வேறு, உச்சிதமாய்ச்சுட்டுஒவ்வொ ன்றுவெவ்வேறாய், வைச்சவகைக்குவளமாய்ப்படியொன்று,கச்சய பாண்டத்துள்கணைக்காகப்போட்டிடே: (௨௱௰௫)

போட்டேயமுரி புகட்டுபதினைந்து, நீட்டேநற்கோமியம்நினை வாய்ப்பதினைந்து, ஊட்டேகழுதையுறவாடுமானையு, மாட்டேவகை க்கைந்துவளமாம்படிதானே. (௨௱௰௬)

படிநாற்பத்தைந்தாம் பாங்காமமுரியு, மடிவாமுன் சாம்பலில் வார்த்தேகரைத்திடு,வடிவாய்த்தெளிவைவளமாகக்காச்சையிற்,படி வாய்க்குழம்புபதங்கண்டுகாச்சிடே, (௨௱௰௭)

காச்சுங்குழம்புக்குள்காட்டுவெடியுப்பு, ஓச்சியசாரமுடன்சீன ங்கல்லுப்பு,மாச்சியயிந்துப்புவழங்குநவாச்சாரந், தாழ்ச்சியெவாட் சாரஞ்சத்தியட்சாரமே. (௨௱௰௮)

சத்தியாம்பஞ்சலவணங்கடனுமைமத்தியவன்னபேதிவகையெ ல்லாம்,ஒத்தவிடைதானேயொன்றவைம்பலம்,உத்தேபொடித்துவு ருக்கக்குழம்பிடே, (௨௱௰௯)

குழம்பிவிடவேகூட்டும்பலங்கெந்தி, குழம்பிற்பலம்வீரங்கொ டுத்தசங்குசுன்னமும், குழம்பிலெருக்கம்பால் கூட்டுபடியொன்றுகு ழம்பினிற்காச்சிக்குலாவியுருட்டிடே (௨௨௰)

உருட்டியேயீங்காணினுள்வைத்துமூடிடு, நெருட்டியே நெல் லுக்குழியிற்புதைத்திடு, கருட்டியபட்சங்கடந்தபின்வாங்கிடு,மருட் டிடுசாரணைமகத்தாம்புடமிடே (௨௨௧)

புடத்திவிதைவிட்டாற்பெரியபுடமில்லை,நடத்திநுலேகலமா னசாரணை, நடத்திடுவாலையுங்கட்டியகூதமும், உடத்தில்வெவ்வே றூட்டிவிடுவையே. (௩௨௨)

விடுவிக்கமார்க்கங்கேள்விளங்குமகாசூதம், அடுவித்தமுசைவி லாடியுருசையில், கொடிகட்டுங்கெந்தியைக்கூட்டிக்கிருவணம், கடு மட்டவிந்துநாட்டுபுடத்தையே (௨௨௩)

நலக்கறச்சூதநல்லாவியுண்டு, பிலக்குமேதீபனம் பெரியதாக மாகும்,மலக்கறவுப்பிறகச்சத்துமுதலெல்லாம்,நிலக்கறவெவ்வேறா ய்நீட்டிவிடுவையே. (௨௨௪)

விட்டபின்லோகங்கள்விரிந்துவிரித்து, மட்டபின்மூலிகைசெம்பிட்டுப்போக்கிடு,நட்டமணிசூதம்நலமாக்கவேயேறு, மொட்டியரத்தினமொக்கப்பரிகூட்டே. (௨௨௫)

கூட்டுமுறைபாடுகுலாவுபரிச்செம்பு, நீட்டியவொன்றுக்குமளாமூன்றுரத்தின, மூட்டக்கிராவணமொக்கக்குடோரியுங், காட்டித்திசைக்கொன்றுகாக்கியுருக்கிடே. (௨௨௬)

உருக்கிடும்ரத்தினமொன்பதுமப்படி, பருக்கிடுவச்சிரம் பரியுஞ்சரிகூட்டி,நெருக்குங்கபாலப்பொடியுங்குடோரியுங், தருக்கியுருக்கிடச்சார்ந்துவுறவாமே. (௨௨௭)

உறவானரத்தினமொன்றுசூதத்திற்கு, நிறையாய்சரிகூட்டிநீட்டிப்புடமிட்டு, அறையாங்குகைக்குள்ளேயாட்டிவிடுத்திடத், துறையானசூதஞ்சோதிமயமாமே (௨௨௮)

மயமானசூதத்தில்மாட்டிப்பரிச்செம்பை, நயமாய்விடுவிக்கநல்லவருணனும்,பயமானதெல்லாம்போம்பாருஞ்சிவரூப, நயமான அஷ்டாங்கவொருகோடிசித்தியே, (௨௨௯)

சித்துவிதங்கேழ்க்கச்செப்பினனொன்னந்தி, உத்தமூன்சாரணையொருநூறுக்கேயொடு, மத்தானடாந்தர்மவளமாகவாய், முத்தமூனுந்தாமுப்பதுக்கோடுமே. (௨௩௰)

ஓடிநாற்சாரணையுயர்ந்தவொருலட்சம், நீடும்பானைந்து நிகராமொருகோடி. யோடுமூணைத்துணைவொளியாதுகாயந்தான, வாடுங்குகைக்குமகத்துவங்கோடியே (௨௩௧)

மகத்துவங்கேசரம்வளமானபூரகங், தகத்துமெகிர்த்தோனாதப்பாக்கெவனமா, முகத்தினவலோகமுமியப்பசம்பொன்னும், அகத்திடும்பாவத்தையாதிசிவனுமே. (௨௩௨)

ஆகியாம்வாலைக்கடவானசாரணை, போகவேமூன் போற்போடாய்வரிசையாய்,நீகியாய்மேனிநிறையாய்ச்சிவப்போடு, சாதியாம்வாலையிற்சதகோடியோடுமே (௨௩௩)

ஓடுநவலோகமொருபொட்டிலம்மா, நாடுங்கடுகுண்ணநமனில்லைபார்யாரு, வாடியிளைத்துமயங்கியமாண்பரோ, கோடியிற்கோடிவெகுகோடிசித்தியே. (௨௩௪)

சித்துக்குமூலங்கேள்சேர்ந்தநற்சாரணை,சித்துக்குமூலங்கேள்சேர்ந்தநற்பீசங்கேள்,சித்துக்கிரண்டுஞ்சேராதகாலத்திற், சித்துக்கங்கொன்றில்லைச்சேர்விழல்கேளே (௨௩௫)

கிராவணம்.

கேளாய்சிலைகெந்திகெடிதாளிமிளையும், வாளானபூநாகம் வளமானகாந்தமு, நாளாயிவையைந்தும்நலமாய்ச்சரிகூட்டி, காளானரோமநீர்க்கன்சத்தயிலமே. (௨௩௬)

தயிலத்தைக்குத்திதன் னொக்கமத்திக்கு, மயிலைக்குகைக்குள்ளேவளமாகப்பூசிட்டு, எயிலத்துக்கட்டியசூதமேதாகிலும, பயிலத்துவைத்ததிற்பாங்காயுருக்கிடே. (௨௱௭)

வேறு.

உருக்குமுகத்திலுறவிடுசத்துக்கே, ருருக்குமுகத்தி லுறவிடுலோகங்களை, உருக்குமுகத்திலுறவிடுசெம்பு, அருக்குமுகத்தி லூட்டிடுதங்கமே. (௨௱௮)

தங்கங்களீய்ந்ததுசாரணையானபின், பங்காயரத்தினம் பாங்காய்விடுவிப்பாய், எங்கெங்குஞ்சாரணையேற்றிடநூறேறிடும், பங்கமாயிரம்பதினாயிரங்கோடியே. (௨௱௯)

வேறு

ஒட்டுக்களங்கமுயர்ந்திடுஞ்செந்தூரம்பாட்டுயர்பற்பம் பகிர்ந்ததுறைக்கெல்லாம்காட்டியேவாங்கிநலமாகவேதிக்க, காட்டிடுசென்னைந்திகுருவணவித்தையே. (௨௱௰)

பிச்சுவகைகள்.

வித்தையிற் பன்றிவிளங்குங்குதிரைதான் கொத்தியகோழிகுலாவியவாடானை, முத்தியெருமைபுழுக்கும்பசுகாக்காய், பந்துமணிதனும்பாங்காந்தவளையே, (௨௱௰௧)

பாங்காய்மயூரம்பதமாகவெவ்வேறு, வாங்காய்நீபித்தெல்லாம் வளமாயுலர்த்திடு, ஆங்கமனுசரவங்கடாமாடு, ஓங்காக்குரும்பிபொருமூன்றில்வாங்கிடே. (௨௱௰௨)

வாங்கும்புழுகுவளமாய் மூலைப்பாலு, தேங்கியதேனுந்திரண்டமெழுகோடு, பாங்கேதகாதன்பரிவானசுக்கில, மோங்குமமுரியுயர்வானவாய்நீரோ. (௨௱௰௩)

நீரானகாரம்நிலாயம்வெடியுப்பு, காரனசாரங்கவரிசவ்வீரமாம், வேரானபூரமும்விளங்கியவெண்கண்டா, ஆரானவெள்ளையதிமதுரமிடே. (௨௱௰௪)

இட்டமருந்தெல்லா மினத்துக்கோர்காசடைமட்டாக நல்லெண்ணெய்வார்த்தனைக்காற்படி, தொட்டவசம்புச்சாற் சூட்டதிற்காற்படி, ஒட்டக்குழைத்துவுறவாகவைத்திடே (௨௱௰௫)

வைத்திடுதோளகத்தாலே யிழுவங்க, மொய்த்திடப்போட்டுமுழங்கவறுத்திடு, கைத்திடுநாகத்திற்காட்டுமனோசிலை, யுத்தேயுருக்கவுறுதியாம்பற்பமே. (௨௱௰௬)

பற்பமிதுமூன்றும்பகுந்தொருகாசெடை, பப்பியகுன்றிபருப்பொருகாசெடை, ஒப்பியரைத்தவூட்டிக்குழம்போடே, செப்பியடிப்பேற்றிச்சேரக்கொதிப்பியே. (௨௱௰௭)

கொதிக்க பதத்திலேகூட்டிமெழுகாக்கி, அதித்தசிமிளிலடைக்கிறசிராவணம், பதித்தசாரக்கும்பமுககாகனகமு, மதித்துள்ளேவாங்கிமலையும்பழுக்குமே. (௨௪௮)

வாதக்குடோரி.

கோடிதுறைக்கெல்லாங் கூட்டவுருக்கினம், போடுபலமதுபூநீறிணங்கனும்,கட்டிப்பலமரண்டுகலக்காமேயரை. ஏடியவெள்ளையிதற்குச்சரிகூட்டே, (௨௪௯)

கூட்டியவெள்ளைதுலாவியாண்டிடை, ஊட்டிடுகாளகமுருகப் பொடிசெய்து, நீட்டியெருக்கம்பால்நீள்வெயிலேழுநாள், ஓட்டியவாலுகையுணர்வாயெரித்திடே. (௨௫௰)

எரிப்பதுநாழிகையிருமூன்றுசாமம, மருகிக்கமேலேவளமாய்ப் பதங்கிக்கு, நெருகியவாதக்குடோரியிதன்பேர், செருக்குமுன்செம்புக்குஞ்சேர்ந்தநற்சத்துக்கே. (௨௫௧)

சத்தையுருக்கச்சகலமுநீராக்கு, மத்திச்சபீங்கானும்வச்சிரக்கல்செங்க, லுக்கேயுறுமணலுபரசமெல்லாங்கேள், சத்தேபடுமுன்னேதண்ணீர்படுமுன்னே (௨௫௨)

தண்ணீரைப்போலேசகலமுருக்கிடு, முன்னேருரைத்தமுழுங்குந்துறைக்கெல்லாங், கண்ணியசெம்புகளசத்துசயங்கேள், எண்ணிமறவாமலிடுவாய்திசைகொன்றே. (௨௫௩)

வேறு-காரக்குடோரி.

பூரமோவோரிடைபுசழ்வீரமரண்டிடை, பாரியமாணிப்பல்பகிர்ந்தேயரைத்ததைக், காரியின்மேற்பூசிகாட்டுரவிபடி, தாரியிற்காரந்தப்பாதுகட்டுமே. (௨௫௪)

கட்டியகாரங்கனத்தயிடைமூன்று, மட்டுக்கருநெங்குவளமாகவோரிடை, இட்டமாய்வாதகுடோரிதிசைபத்து, ஒட்டியரைத்துவுறவாய்ப்பொடிபண்ணே, (௨௫௫)

பண்ணிச்சிமிழில்பாங்காயடைத்தபின், எண்ணியவெத்தனமினமாமுருக்கினங், தண்ணியலோகத்தைச் சமைக்குமலம் போகா, தொண்ணைக்களைகூட்டியுருக்குமிதுபாரே. (௨௫௬)

பாரேயிதுருபட்டசெல்லாஞ்சாகும், வாரேதுரத்திணைமணியாயொளிதருஞ், சீராதுமுன்னேசெகதநிலுருக்கினம், வாரேது காரக்குடோரியிதுவாமே. (௨௫௭)

வேறு-மால்தேவிசத்து.

செங்கருவாலேசேர்ந்ததுமால்தேவி, பங்கறநோக்கிப் பகிர்ந்தேயரைத்திடு, வெங்கயவில்லைபோல்விளங்கவுலர்த்திடு, சங்கைகேள்தாளகந்தானுறவாகுமே. (௨௫௮)

எட்டோடுவாதக்குடோரியுமொன்றிடு,இட்டமாய்வில்லைதான் சேரவுலர்த்திடு கட்டியகாரங்காணும்பலம்காலு,தட்டியசாரந்தானுமிருபதே (௨௫௯)

இருபத்துநான்குமிளையவேவெண்சரு, மருவியனைத்துவளமா
சக்கினளியே, கருவிலெடடொன்றுகாண் பூசிவில்லவை,தெருவிபு
மேலிந்தசேர்ந்தபொடிதூவே. (உகூ௰)

தூவியமூந்திரூட்டியடுப்பில்வை, பாவனையாகப்பகுந்கெட்டா
ல்மூன்றுநாள், தாவியபன்றிநெய்தானதின்பேவிட்டு, தாவித்தெரி
சிக்கச்சத்தாஞ்செயமிதே. (உகூக)

தாளகச்சத்துக்களங்கம்

செயமானசத்திலேசேர்க்கவெகுதொழில்,செயமானசத்திலே
சேர்த்திடுங்கிண்ணிதான், செயமானசத்திலே செயமாம்ரசங்குரு,
செயமானமாமுதற்சேரவுருக்குமே (உகூஉ)

உருக்கியசத்துக்குவொத்தவிடைதங்க,மருவியுருகையில்மாட்
டுசவ்வீரத்தை,பருதிக்களங்காகும்பஞ்சமலோசகதிற், சொருகிடு
நாற்றொன்றுசுத்தபசும்பொன்னே, (உகூங)

பொன்னுமிடையொன்று போடதிற்சத்தொன்று, மன்னுமிரு
ம்பொன்றுமாட்டொன்றுநாகந்தான்,பன்னியுருக்கையிற்பாச்சிடை
லிங்கத்தை,தன்னியவீரறுந்தாக்கக்களங்காமே, (உகூச)

களங்கம்நவலோகங்காட்டவோராயிரங், தளங்காரமாற்றுந்தா
னேபதிறு,வளம்பெறவிப்படிவகைகள்வேறுமெத்த, உளம்பெறு
சித்தியாமொளிபாதுகாயமே, (உகூரு)

தாளகசத்தில்கிண்ணி,

காயம்படைத்தோர்க்குக்காட்டினர்பாத்திரம், மாயாமல்தேவி
ளமானசத்தாலே, பாயவேகிண்ணிபோற் பகுந்தங்கு வார்த்திடு,
ஓயாதகிண்ணியிலொருகோடிவேதையே, (உகூசா)

வேதைரசிதம்விளங்குமுறைசேரு,ஆதையாஞ்சூகமதனைவார்
கிண்ணியிற், போதவேவாலுகைபூட்டியெரித்திட, மாதேகேள்சூத
மகத்தாங்குருவிதே, (உகூஎ)

குருவிலே நாற்றொன்று கூட்டிடுவங் கத்தை, குருவிலேநாற்
றொன்று கூட்டிடுசெம்பின்மேல், குருவிலேநாற்றொன்று கூட்டிடு
நாகத்திற்,குருவால்ரசிதந்தான்குறையாதுசீனமே, (உகூஅ)

உரைத்திடுசுன்னநீறுறுகொள்ளுப்பால்தயிர்,விரைத்திடுங்கூழ்
ப்பாண்டம்வெறுநீர்ச்சரக்காடி,அரைத்துஅகத்திவிரைவேர்த்தயில
மூங்,துரத்தியேதாளகஞ்சுருக்கிடச்சுத்தியே, (உகூகூ)

தாளகசுத்தி,

சுத்தித்ததாளகஞ்சூட்டிடுசத்துக்கு, சுத்தித்ததாளகஞ்சூட்டிடு செந்தூரஞ், சுத்தித்ததாளகஞ்சூட்டுகுருமுறை, சுத்தியில்லாவிடிற் றுனறபொன்றுமாகாதே, (௨௭௰)

சட்டியகாரங்களத்தயிடைபத்து, மட்டியவாதகுடோரியுமொன்பது, வெட்டியதாளகச்சத்தாமிடையெட்டு, ஒட்டியவீரமுருகுமிடையேழே, (௨௭௧)

இடையாறிதிற்கூட்டுமிதமானவெண்காரம், படையானசாரம் பசாந்திடுமைந்திடை, படையானிணங்கனூறுநாலிடையதில், குடையாங்குருவொங்குகூட்டுமிடைமூனே, (௨௭௨)

மூணிலமேழு மூட்டுமிடைரண்டு, ஆணியகுன்றிப் பருப்புமிடையொன்று, ஊணியசேணிலுருகவரைததிடு, பேணித்திசைகாரக் குடோரியினபேசோ, (௨௭௩)

போரான்றுறைக்குப்பெலத்தகுருவிது, வாராயுந்தாறதுவறுபது ன்கட்டுண்ணும், பூராயமானசரக்குகள்நீறிடும், மீராங்குருராசனிதற்குமேலில்லையே, (௨௭௪)

இல்லையிதற்குமேலெடுக்கதுறைச்செல்லா, யில்லையிதுவிட்டா லெய்சாதுவொதந்தான், இல்லையிதுமேலேமூகரு மின்னே, இல்லையுருக் கினமிதைவிட்டானந்தியே. (௨௭௫)

உருக்குமித்திரம்.

நந்தியுரைத்தார்நலமாய்த்துறைச்செல்லாம், பந்தியவாதத்திற்ப குக்கதிசைதரு, ஒந்திப்பரிசனமுறுதிப் பண்லேபனம, முந்திப்பழக்குமுருக்கினங்கேளுமே. (௨௭௬)

உருக்குந்துறை சேளுவுபாரசம்நாம்றெட்டு, பருக்கியலோகரு ம்பாங்கான மண்மணல், கருக்கியமூலிகை காணுமுன்செம்பாகுஞ் செருக்கியகல்லத்திசேரவுருக்குமே. (௨௭௭)

ஒன்றனமித்திரமூலகத்தில்வெண்காரந், தென்றனரண்டுசேர் காரசாரமும், பன்றன மூன்றுபடிகி யுடன்குன்றி, வன்றனவெண் கருவாரியேமூன்றிதே. (௨௭௮)

ஆகவேநாலுமணைந்திட்டமித்திரம், போகவேசாரம் புகுந்திடுமி ந்துப்பு, தாகவேவெண்ணை தனித்தபெருகொடு, யோகமேநாலுமு றவாயதைத்திடே, (௨௭௯)

உறவானகுன்றியுடன்றேனல்வெல்லங், கறவானகாரங்கலந்திடுநெய்யொடு,துறையாமுகமெல்லாஞ் சூட்டஞ்சுமிக்மரம், நிறையர்கநந்திநோயுரைத்ததே. (௨௮௰)

வேறு-வச்சிரகுரு.

பசுவினிளங்கன்றின்பாங்காமலத்தோடு, தசுமையாய்த்தொட்டுதானேயிளகிட்டு, வசுமையவச்சிரமேலேபொதிந்திதை, யசுமியவண்டப்பொடிக்கீழுமேலிடே. (௨௮௧)

இட்டேகுகைமூடியிதமாகவூதிட், மட்டானவச்சிரம்வளமாய்க்குருவாகும், தொட்டமகாகுருசூட்சமறிவார்க்குப், பட்டவுடன்சூதம்பதையாமற்சாகுமே (௨௮௨)

சிவக்கின்றதங்கத்தைத்தேய்த்தநவலோகம்,பவக்குறைதீர்த்துபத்தரைமாற்றாகுங், துவக்கியசூதககுருமேலேதொந்திக்க, நவக்கவிறக்குநவகோடிசூதமே (௨௮௩)

சூதம்.

சூதமிறந்தபின்சுறன்றதுவாதந்தான், சூதமிறந்தபின்சொர்ணமாங்காயந்தான், சூதமிறந்தபின்சுகமாங்கெவனந்தான், சூதமிறந்ததிதுலையாதவேதையே. (௨௮௪)

சுத்தித்தகெந்தகஞ்சூட்டும்பலம்பத்து, பத்தித்தவூடுதின்னைப்பாலையுப்பைந்து,ஒத்திதவக்கூட்டியுறவாய்க்குமரிச்சாற், குத்தியேவஞ்சாங்குலாவியரைத்திடே. (௨௮௫)

அரைத்துவுருட்டியலரவுலர்த்திடு,விரைத்திடுசீலையுமேலேதாவூல்சுத்தி, தாத்தியசிந்திசர்க்கரைமேற்கட்டி, பாத்தியசிந்திச்சாற்பானையில்வார்த்திடே (௨௮௬)

வார்த்திடப்பாலைவாய் வண்டதுகட்டியே, சேர்த்திட்டவுண்டைவைசீரோட்டைமேல்மூடு, வேர்த்திட்டடுப்பிலெரித்திடிருசாமமார்த்திட்டபிட்டாகும்வாங்கியுலர்த்திடே (௨௮௭)

உலர்த்துமுன்சீலையிலொட்டாமல்வாங்கிடு, மலர்த்திப்பின்மாதளைவிரைத்தயிலம்பூசு, பெலத்திடுபோக்கிற்பேசாமற்கட்டிடு, மலத்தித்தினம்பூசியைந்தாநாட்கட்டிடே (௨௮௮)

துரிசுகுரு.

கட்டியெடுத்துக்காட்டுங்குமரிச்சாற், ஒட்டியரைப்புவுறவாகவைஞ்சாம, மட்டியபீங்காணில்வளமாகப்பூசிட்டு,தட்டுமேல்தூக்கிடுசந்திரன்காணவே. (௨௮௯)

காணவேசந்திரன்கசிந்துசலம்வீழும், தூணிபோல் கும்பித்து த்தூக்கிடுகிண்ணியை, வாணவாய்வாரிதிபோலேதிறிகுவி, காணிய வெய்யலிற்காச்சாய்திருதியே. (உகூ0)

திருதியுலர்ந்துசேர்ந்துகுருவாகு, மறியவேகெந்திக்குருகாணு மம்மம்மா,பொருந்தியாஞ்சூதந்தான் போடுமுன்கட்டுண்ணும்,நெ றிதியாந்தாதுக்கணிமிஷத்திற்கட்டுமே. (உகூக)

கட்டுஞ்சகலமுங்காணுமுன்வேதிக்குந்; தெட்டிடைகுன்றிமி டைதின்னச்சித்தியாம், பட்டும்படாமுன்னேபரிசத்தில் வேதையா மொட்டுங்குருவேதையொருகுறுக்கில்லையே, (உகூஉ)

துரிசுகுரு.

சுண்ணும்பறியாதவர்சூட்சமறியாரோ, வண்ணார்துறையில்வழ ங்கிடுஞ்சுணணும்பு, சுண்ணும்பினோடே சொருகுந்துறைகண்டு, சு ண்ணும்புசெயவாரதுசொர்னவரிசையே (உகூ௩)

வரிசைதுரிசுக்குவளைந்திடுஞ்சுன்னத்தை, புரிசத்துடனேபோ ற்றிடுஞ்சிலைதான், கரிசப்பதமனூர் கனற்படவாட்டியே, பரிசிக்சச் சொர்னம்பற்பமதாகுமே (உகூச)

பற்பங்குருவாய்ப்பகுந்திடுநாளேயிற்,கற்பமுமாகுங்கணையில்லை வேதைகே, எற்பமுமில்லையகண்டமகாகுரு, உற்பனமென்றுவுணா த்தனர்நந்தியே. (உகூரு)

நந்தியுரைத்தார்நலங்காக்குருவேதை, பந்தித்துப்பாஷாணம் படுமுன்னேகட்டுண்ணும்,கொந்திக்கத்தொந்திக்கத்தாரவளியோடு ஞ்,சிந்திக்கச்சிந்திக்கத்தெவிட்டாதுசிந்தையே. (உகூசு)

சிந்தச்சிலரண்டஞ் சிறுகத்தமரிட்டு, மூந்தியசொர்னக் குரு வோர்பணவிடை,அந்தித்துவெயிலில்வையமளிமெழுகாகுஞ்,சந்தி த்துவேதிக்கச்சதகோடிவேதையே. (உகூஎ)

வேதித்தளைத்துவிடுசுத்தசூதத்தில்,ஓதித்தசொர்னக்குருவோ ர்பணவிடை,பேதித்தரைக்கப்பிரண்டுமெணியாகும்,வாதித்தவசியமு ம்வாதமும்பார்த்திடே (உகூஅ)

பார்த்தகுளிகைபதஞ்செய்யவல்லோர்க்கு, மார்த்தாக்கெளவு ணம்வளமாய்க்கொடுபோகும், சேர்த்ததினமேழுதின்றிடச்சித்தியா ம்,கார்த்திடப்பத்தியங்காயமிறுகுமே (உகூகூ)

வேறு-துரிசுகுரு.

இன்னந்துரிசுகுருகேழ்க்கவென்னந்தி, மண்ணுஞ்சுவர்க்காரச் சுன்னமுஞ்சூடனும்,பண்ணுங்குருவண்டுபகர்ந்திடுஞ்சூதமும்,தண்ணுயர்வீரமுந்தானுமிடையாறே. (௩௰)

இடையாறுகாரமிதமாகவாய்நீறிற், புடையாய்த்துரிசிமேற் பூசியேவெய்யயிலில், அடையானமண்டல மாகவேவெண்ணீறுங், குடையானவாத்தின்குருவாமுறைபாரே. (௩௰க)

முறைபாங்குருக்கொண்டுமூட்டுசேரக்கெல்லாம், குறையாமற் கட்டுண்டுகோடிக்கும்வேதையாம், அறையாந்தழைக்கெல்லாஞ் சூட்டிடச்சாற்றவரு, மறையானசூதமணிபோலக்கட்டுமே. (௩௰௨)

கட்டுங்குளிகைகவனங்கொடுபோகும் கட்டுங்குளிகைகலந்து வசியமாம், கட்டுங்குளிகைகாட்டச்சுரூபியாங், கட்டுங்குளிகைக்குக்கரையில்லைவேதையே. (௩௰௩)

மூலிகையில்சாறுவரக் குளிகை.

பூராதமூலிகை பூவகையானதில், வாராதசாறுவரவே குருகேளுநேரானகாந்தத் தினீட்டுயெருக்கம்பால், பாராய்தினமைந்துபாவித்துலர்த்திடே. (௩௰௪)

உலர்த்தியேகல்மதமுறக்காட்டத்தீபத்தில்,விலர்த்தித்தயிலமாம்விடுமதிலீரணை, கலர்த்தியகாரமேற்காணவேபூசிட்டு, அலர்த்திய வெய்யலிற்சூழவுலர்த்திடே. (௩௰௫)

உலர்த்திக்குருபண்ணவுறவானவுப்புகேள், பிலத்தபரமார்க்கம்பெருநீர்படியொன்று, கலத்தங்கதலிக்கிழங்குச்சாற்நாற்படி, உலர்த்திக்கரைத்துவுரைதேத்தாங்கொட்டையே. (௩௰௬)

பூரகுரு.

கொட்டையுரைத்துக்குலாவித்தெளிவூட்டே, மட்டானபூரம்வளமாய்ப்பலமிட்டு, நிட்டையாய்க்காச்சிறிற்குங்குருபூரம், தொட்டதழையெல்லாஞ்சொற்குருவாகுமே, (௩௰௭)

ஆமேமுட்டக்கொத்தானடவானநீர்படி,போமேநற்கோமியம்புகட்டும்படிநாலு, தாமேகரைத்துத்தயவாய்த்தெளிவிறு, காமேவுவெண்காரங்கரைப்பாய்பலமொன்றே, (௩௰௮)

காரலவணகுரு.

கரைத்தேயுறக்காச்சக்களங்கற்றுவெண்மையாம், தரைத்தநலக்காரலவணக்குருவிது, முரைத்தேதழையுமுறிந்துசலவரும், பறத்தேகுருமூன்றும்பாங்காய்ப்பலமூன்றே. (௩௰௯)

சண்டர்.

மூன்றுகுருவுக்குமுதலாமசாகுரு, நீன்றியசூட் னிறைபோக வாய்நீரில், ஊன்றியனாத்துவுறப்பூசுகாண்டர்மேல, காண்டவெயிற் படக்கனமாய்ப்பொருமுமே. (௩௱௰)

துரிசுகுரு.

பெருமுங்துரிசுபோகாமல்வாங்கிடு, அருமைத்துரிசுகுருபற்ப மாமது, முருமைப்பலமொன்றுமுன்குருமுன்பலம், பொருமிக்கா லுமுறவாயலைத்திடே. (௩௱௰௧)

அரைத்தபலம்நாலுமரைப்பலம்வீரமுங், தரத்தேபொடித்துச் சாத்திச்சிமிழில்வை, விராத்தமகாகுருவேண்டியபூத்தழை, தாத் தேபடுமுன்னேதண்ணீருந்தப்பாதே. (௩௱௰௨)

தப்பாமல்சாறுதான்வன்னமாய்வரும், ஒப்பாய்க்குருமுன்னே யொருகுருவுமில்லே, இப்பால்தழைமுதலெடுத்ததுமைக்கெல்லாம் அப்பாமேற்சொன்னதை அறியவேபூட்டிடே. (௩௱௰௩)

பூட்டியேயிப்படியுறவாகிவிட்டிடுங், காட்டியகாட்சிமெழுகாய் க்கனாந்திடும், போட்டிடமூலிகைபுகிதச்சாருய்விடும், நீட்டியபூச் சாறுமிஷத்தில்மயினமே. (௩௱௰௪)

தங்கமும்அப்பிரேகமும்கிண்ணியில்சூதம்.

தங்கமிடையொன்றுதானேயுருகையில், பொங்கியவப்பிரேகமி டைரண்டிடு, அங்கியுருகையிலதுவாருகிண்ணியில், நங்கியகிண்ணி யில்நற்சூதம்வார்த்திடே, (௩௱௰௫)

வார்த்திடுகிண்ணியைவாலுகைமேல்வைத்து, ஏக்துசதுர்முக க்குருவினிலெட்டொன்று, வாத்தியவாலம்பா லதனில்நிறையவா ர், தோத்தியகொம்பாலேசுழலவுறுத்திடே, (௩௱௰௬)

வுருத்திடச்சூதமகாகுருவாயிடும், குறித்திடுக்குன்றி யிடைதி ன்னமண்டலம், மறித்திடுஞ்சாவுவாராதொருநாளும், சிறுத்துநவ லோகங்தெறிக்கவேவேதையே. (௩௱௰௭)

சாரநீர்.

சாரம்பலமொன்றுதனிக்காடிமோர்பலம், வீரம்பலமொன்று வெள்ளண்டத்தோலரை, நேராசநாலும்நிமிர்ந்தனாவாய்நீரி, லோ ரேயுருட்டியுணரப்புடமிடே. (௩௱௰௮)

தாளகம்;

இட்டமருந்தையியல்பாய்ப்பனியில்வை, கட்டியசாரநீர்காணு மிதுபாரு, ஒட்டியநீரிலொருகோடிவேதைகேள், மட்டில்லாத்தாள கம்வளம்பெறச்சத்தாமே. (௩௱௰௯)

தொந்தம்,

சத்தாம்வகைகேழ்க்கச்சாற்றினாரென்னந்தி,எத்தானதாளகத் துட்டனேஅயக்காந்த, மத்தானகாரம்வகைக்கோர்வராகன்கேள், பத் தானரெங்குபணவிடைபோட்டிடே, (௩௨௰)

போட்டேயுணாப்பாய்புசழ்சாரநீரிலே, மாட்டேகுகையில்வள மாகவைத்தூது, ஓட்டேயுருகியொருமணி யாய்நிற்குந், தாட்டேம ணிக்கிடைதாளகங்கூட்டிடே, (௩௨௧)

இட்டமருந்தினியல்பானகாரந்தான், மட்டாய்வராகன்வழங்கி யரெங்குதான், குட்டாகரெண்டுகுன்றியிடைகூட்டி, தொட்டேசெ யநீரால்கூட்டியரைத்திடே, (௩௨௨)

அரைத்தேயுருட்டியட வாயுருக்கிடு,தரைத்தே குளிகைக்குச்ச ரிகூட்டுதாளகம், விரைத்திடுமுன்னிடைகாரமும்ரெங்கிடு,பரத்தே யுருக்கினம்பதினாறதாம்பாரே. (௩௨௩)

பாரோசெயநீர் பதினாறதாய்விடு, பாரோநற்காரம்பதினாறதாம்வி டு,பாரோபாரெங்குபதினாறதாம்விடு, பாரோயிதுசத்துபரிசத்தின்வே தையே, (௩௨௪)

வேதைபிறந்ததுவிடுபட்டதேசிபோ, லாதிப்பரியொன்றுமாகி னசத்தொன்று, மாதித்தநாகமுமாட்டுயிடையொன்று, சோதியாம் வீரமுஞ்சூட்டாயிடைரண்டே, (௩௨௫)

இட்டவிடையைந்துமிதமாய்ச்செயநீரில்,மட்டாயரைத்துவள மாகவில்லைசெய், ஒட்டிக்கிளிஞ்சிலுணர்வாம்ப் புடஞ்செய்ய, தொ ட்டகுருவொன்றுசொன்னாரென்னந்தியே, (௩௨௬)

சூதகுரு,

நந்தியுரைத்தநலமாங்குருவிலே, சந்தேகந்திரச்சமனாகச்சூத ஞ்சே,ரந்தித்து அந்தியரைத்தேபுடமிட, பந்திக்குருசூதம் பரிசன வேதையே, (௩௨௭)

வேதைரசகுருவிடுவாய் நவலோகம், பேதிக்குமாயிரம் பெரு மாத்திருபதாம்,வாதிக்குமெச்சிமகுத்துவமானது, ஆதிக்குருவென் றுஅறிவோர்பெரியோரே, (௩௨௮)

பெரியோரறியவேபேரானசத்துகேள்,அறிவானவங்கத்திலது பத்துக்கொன்றிடு,கருவானவங் கத்தைத்தாக்குமதிபத்திற்,கருவாய் மதியொன்றுகளங்கையெடுத்திடே, (௩௨௯)

எடுப்பாய்மதிமூன்னிடு வங்கமொவ்வொன்று, மடுப்பாய்மூன்சத்தொன்றுவாள்வீரந்தானென்று, தொடுப்பானசூதஞ்சூட்டதிலண்டிடை,நெடுப்பாஞ்செயநீரில்நீட்டியரைத்திடே, (௩௩௰)

அரைத்தேயுருட்டியடவாயுலர்த்திடு,விரைத்தேயிழைசீலைமேல்சுத்திநால்சுத்து,கரைத்தேநற்சீலைமண் சாத்துதனிமூன்று,கரைத்தேபுடமபோடக்காணீர்குருவாமே, (௩௩௧)

குருவிலொருவிடை கூட்டுறவங்கத்திற், றருவிய சீனஞ்சுதமாகுந்தப்பாது,அரிவைக்குயீசன்றேயுரைத்து, மருவியயேமாசிதவழிபாடே, (௩௩௨)

ஈயவகை,

வளியாம்ரசிதக்குருவாலுபரசங், களிவானசுக்கான்காந்தமணிபுங்,தெளிவானவப்பிரகஞ்செங்கால்நண்டோடிவை, எளிதாகப்பூசிட்டிடுபுடமீயமே, (௩௩௩)

ஈயம்பிறக்கு மெடுத்தசரக்கெல்லாங், காயமும்லோகமுங்காட்டுமுன்சித்தியா,மாயும்பெரியோர்கள்வைத்திடுபோக்கிது,மாயாப்பதார்த்தமாவைத்திடுபோக்கிதே, (௩௩௪)

தங்கமும்இரசமுங்கட்டு,

வைத்திடுதங்கம்வளமாகவோரிடை ஒத்தியநற்சூதமொன்றரைதான்கூட்டு,மத்தியரைத்துவளமாயுருட்டிடு,பத்தியதண்ணீரிற்பாங்காகப்போட்டிடே, (௩௩௫)

போட்டகுளிகையைப்புதைமத்தங்காயிலே, வாட்டிப்புடந்தான்வைப்பீர்பதினொன்று, பூட்டியநாகம்போல் பொருமிரசங்கட்டும்நீட்டியதங்கத்தின்நேர்புடம்வைத்திடே, (௩௩௬)

வைக்கும்புடந்தான் வளமாகத்தீர்ந்தபின், நொய்க்கும்பிறவெள்ளைக் கண்டருஞ் சாரமு, மொய்க்கும்படிபூசி முளவாட்டக் கட்டுண்ணும்-தக்கவேசூதந்தான்தன்மயம்வாங்குமே, (௩௩௭)

செந்தூரம்,

வாங்குமுறை கேட்கவகைசொன்னொன்னந்தி, பாங்கியசெந்தூரம்பகருங்களங்கங்கள்,காங்குநற்காரக்குட்டோரிதிசைக்கொன்று,போங்கியேயுட்புகுமொன்றும்புகையாமே, (௩௩௮)

